புதுக்கோட்டை ஸமஸ்தான

# யுத்த அறிக்கை நிலயம்.

பிரசுரம்] 1941-ம் ஞு ஆகஸ்டுமீ 23உ [ந. 58.


# ‘வி’

## விஜயத்துக்காக

பிரஸங்கம் 58.

## “பிளிட்ஸ் க்ரீக்,” “பான்ஸர்”
அல்லது
## “ஜெர்மன் மின்னல் படையும், பான்ஸர் படையும்.”

---

ராணுவ சம்பந்தமான பாஷை ஸ்பஷ்டமில்லாதவை. ராணுவ பரிபாஷை, மற்ற பொதுமக்கள் அறிந்துகொள்வதற்கு முன்னாலேயே சம்பாஷணையில் அர்த்தம் தெரியாமலே உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது. பொது ஸ்தலங்களிலும், வீடுகளிலும் அர்த்தம் தெரிந்ததுபோலும் பரம ரகசியத்தை வெளியிடுவதைப்போல், அந்த வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதைக்கேட்டு பிறர்களும் அர்த்தம் புரியாமலே சொல்லுகிறார்கள். இவ்விதமாக புத்திக் குழப்பம் பரவுகிறது. இதற்கு உதாரணமாக என்னுடைய சொந்த அனுபவத்தைச் சற்றுச் சொல்லுகிறேன். "பிளிட் ஸ்க்ரீக்", "பான்ஸர்" என்ற பதங்களை எடுத்துக்கொள்வோம். இவைகளின் தாத்பரியத்தை என்னவென்று கேட்ட அநேகர்களுக்குப் பொதுப்படையான வார்த்தைகளைச் சொல்லியே மொழுகி மூடிவிட்டோம். இனி கேட்போர்களுக்கு மேமீ 10-ம் தேதி 'பிட்சர் போஸ்டு' என்னும் பத்திரிகையில் மிஸ்ட்டர் டாம் விண்டிரிங்ஹாம் எழுதிய வியாசத்திலிருந்து இப்பொழுது நாம் சரியானபடி பதில் சொல்லக்கூடும்.

## ஒரு பான்ஸர் பகுதி.

'பிளிட்ஸ்' என்ற மின்னல் போருக்கு தந்திரங்களில் பான்ஸர் பகுதி மிகவும் அவசியமானது. ஜெர்மானியர்கள் செய்யும் முன்னேற்றங்களுக்கு இது ஈட்டி முனையாகும். இது ஒரு பகுதியாயினும் இதன் தலைவன் தனித்த அதிகாரத்தைப் பெற்றவன். ஆகையால் அந்தப் படையில் பொருக்கியெடுத்த உத்தியோகஸ்தர்களும், ஆட்களும்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியின் அங்கங்களாவன :—

| | |
|---|---|
| கனமான டாங்கிகள் ... ... | 48 |
| நடுத்தரமான டாங்கிகள் ... ... | 84 |
| லேசான டாங்கிகள் ... ... | 252 |
| பட்டாளம் கொண்டு செல்லும் மோட்டார்கள் ... | 230 |
| (4", 5·9") கனமுள்ள பீரங்கிகளைச் சுமந்து செல்லும் வண்டிகள். | 96 |
| பாய்ச்சல் "பாம்பர்" விமானங்கள் ... ... | 27 |
| கவசம் பூண்ட மோட்டார் ஸைகிள்கள் ... | 258 |
| இன்னும் மோட்டாரில் செல்லும் காலாட்படை, இஞ்ஜினியர்கள், தந்தி கொடுப்போர்கள் (Signallers) அடங்கிய நாலு படைகளை ஏற்றிச் செல்லும் வண்டிகள். | 1,000 |

இவைகளின் மொத்தம் சுமார் 14,000 அல்லது 15,000 ஜனங்கள் இருக்கலாம்.

## பிளிட்ஸ் போரில் பான்ஸர்படை எவ்வாறு உபயோகப்படுத்தப்படுகிறது.

ஜெர்மனியர்களின் தாக்குதல் நூதன முறையானது. அது எதிரியினுடைய ஒரு வகைத் தற்காப்பை அழித்துப் பிளப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட உபாயமென்று ஜெர்மானியர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். (நேசதேசத்தார்களுக்கும் ருஷ்யா வரையிலுள்ள தேசத்தினர்களுக்கும், தற்காப்பு முறை ஒன்றே ஒன்றுதான்). ஆனால் தற்காப்பு முறை, சைனியத்தை வரிசையாக நிறுத்தி எதிரிகள் அணுகாமல் சுட்டுக்கொண்டிருப்பதுதான், பிரான்ஸ் கையாண்ட முறை. அப்படையில் காலாட்படையைத் தடுக்க பீரங்கிகளும், டாங்கிகளைத் தடுக்க "ஆண்டி—டாங்கி" என்ற பெரிய பீரங்கிகளும் அடங்கியுள்ளவை.

ஜெர்மன் எதிர்ப்பில் ஜெர்மன் சைனியங்கள் சுடுவதோடு நில்லாது, வெகு வேகமாகவும் முன் செல்லவேண்டும். பாதுகாப்பு செய்துவரும் இடங்களில் ஒடுக்கமான பாகங்களில், கனமான கவசம் பூண்டதும், வேகமாகச் செல்லக்கூடிய படைகளைத் திரட்டி, சுட்டுக்கொண்டிருக்கும் எதிரிகளைத் துளைத்துப் பிளந்து கொண்டு, எதிரிகளுக்குப் பின் பக்கமுள்ள பாதுகாப்பில்லாத இடங்களுக்கும் போய் ஜெர்மானியர்கள் த்வம்சம் செய்கிறார்கள்.

பிரெஞ்சுக்காரர்களின் பாதுகாப்புத் திட்டப்படி எதிரியை வெகுதூரத்தில் வரும்போதே தடுப்பதாகும். அவர்கள் சுட்டுக்கொண்டே யிருப்பார்கள். அதனால்தான் எதிரிகள் அணுக முடியாது. ஆனால் 'பிளிட்ஸ்' முறையிலோ சைனிய பலத்தோடும், மின்னல் வேகத்தோடும், செல்வதோடு யுத்தத்தில் சமீபத்தில் வந்து ஒருவருக்கொருவர் கைகலக்க வேண்டியதுதான். அதனால் அவர்கள் ராணுவப் படையில் சமீபத்தில் நின்று சண்டை செய்யக்கூடிய பீரங்கிகள், 'மார்டர்'கள் (Mortars), டாமி கன்ஸ், (Tommy guns), கிரனிடிஸ் (Grenades) இவைபோன்ற ஆயுதங்கள் சேர்த்திருக்கிறார்கள்.

## ஜெர்மானியர்கள் தாக்கும் முறை.

ஜெர்மானியர் தாக்கும் முறை நூதனமானது. வெகு விசாலமான இடத்தில் ஜெர்மானியர்கள் விஸ்தாரமாக எதிர்ப்பதில்லை. எதிரியின் பலஹீனமான முனையை அபார பலத்தைக்கொண்டு ஒரு குறுகிய இடத்தில் தாக்குகிறார்கள்.

### அவர்கள் சைனியத்தை ஒன்றை பத்தாகச் செய்துகொள்ளும் விதம்.

திடீரென்று ஒரு இடத்தில் எல்லா பலத்தையும் சேகரித்து பாதுகாப்பைத் துளைத்து, நுழைந்து மோட்டார்களைக்கொண்டு, ஒரு நாளைக்கு 15-மைல் முதல் 30-மைல் வரை முன்னேறிச் செல்லக்கூடிய சாமர்த்தியம் அவர்களுக்கு உண்டு. ஒவ்வொரு படை பாகத்திற்கும் மோட்டார்கள் உண்டென்று சொல்லவரவில்லை. பெரும்பாலும் சாதாரணமாயுள்ள பாதசாரிகளாய்ச் செல்லுகின்றன. அவை நடந்தோ, ரயில் மார்க்கமாகவோ செல்லுகின்றன. 'பான்ஸர்' பகுதியுடன் சேர்ந்து டாங்கிகளுக்குப் பின்னாலோ அல்லது டாங்கிகளுடனே செல்லுகிறதற்குப் போதுமான காலாட்படை அவைகளுக்குண்டு. அவை பாதுகாப்பை உடைத்து, உள்ளே நுழைந்தவுடன், மோட்டாரில் செல்லும் படையாகப் பிரிந்து பரவுகிறார்கள். அல்லது எதிரி அணிகளுக்கு பின்பக்கம் வந்து தாக்குகிறார்கள்.

சென்ற யுத்தத்தைக் காட்டிலும் இப்பொழுது ஐந்து மடங்கு வேகமாகத் திடீரென்று தாக்க மோட்டார் படையால் முடிகிறது. எதிரியின் பாதுகாப்பைத் தகர்த்து உள்ளே நுழைந்த பிறகும் இன்னும் ஐந்து மடங்கு வேகமாகச் சென்று ஜயத்தை அடையக்கூடியதாக இருக்கிறது.

## விமானங்களும், டாங்கிகளும்.

ஜெர்மன் ராணுவ தந்திரங்களில் இது ஒரு புதியமுறை. அதாவது பலஹீனமான இடத்தில் நன்றாய் கவசம் பூண்டதும், வேகமாய்ச் செல்லும் படைகளைத்

திரட்டித் தாக்குவதென்பது தான் அவர்களுடைய பிரதம தந்திரம். விமானங்களி லிருந்துகொண்டு பீரங்கிகளைப் பிரயோகிப்பதுதான் இரண்டாவது-புதிய தந்திரம். 'டாங்கிக் கூட்டங்களை' உபயோகப்படுத்துவதுதான் மூன்றுவது தந்திரம். போர்க் களத்தில் அவர்களுக்கு வேண்டிய இடத்தில் எதிரிகளின் படை ஒன்று சேராம லும், உதவிப்படையை அனுப்ப முடியாமலும் தடுத்து, பாதுகாப்புச் செய்யும் பீரங்கிகளைப் பிரயோகிக்க விடாமல், எதிரியின் சைனியத்தை இவர்கள் பிளந்து கொண்டு போகும்போது, தங்கள் விமானங்களிலிருந்து ஏராளமான வெடிகுண்டு களைப்போடுகின்றனர்.

எதிரியினுடைய பிரங்கிகளின் வேகத்தைக் குறைக்கவே பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் டாங்கிகளை உபயோகப்படுத்திவந்தார்கள். ஆனால் ஜெர்மானியர்கள் அவைகளை, எதிரியின் யந்திர பீரங்கிகளையும், டாங்கிகளைத் தாக்கும் பீரங்கிகளையும் இன்னும் போரில் உபயோகிக்கப்படும் பீரங்கிகளையும் அழிப்பதற்காக உபயோகப் படுத்துவதில்லை. யுத்தகளத்தில் அவற்றைப் பெரும்பாலும் உபயோகப்படுத்து கிறது மல்லாமல், மோட்டார் படை சண்டை நடக்குமிடத்திற்குப் போவதற்கும், பீரங்கிகள் ஏற்றப்பட்ட வண்டிகளைக் கொண்டுபோவதற்கும், டாங்கிப் படையைக் கொண்டு, விரோதிப் படைகளை துளைத்துப் பாதைகள் ஏற்படுத்த உபயோகப் படுத்துகிறார்கள். இம்மாதிரியாக காலாட்படை எங்கெங்கு செல்லுகின்றதோ அவ்விடங்களுக்கு அத்துடன் பின்தொடர டாங்கிகளுக்கு ஹேதுவாயிருக்கிறது.

## பீரங்கிப்படை.

ஜெர்மன் பீரங்கிப்படை சிறிய பகுதிகளாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றது. சென்ற யுத்தத்தில், கும்பல் கும்பலாய் சென்று ரஸ்தாக்களை மறித்து யுத்தம் செய்தார்கள். அதனால் இவைகளை நாம் திருப்பிச் சுடுவது சுலபமாக இருந்தது, இப்பொழுது அம்மாதிரி இல்லை. காலாட் படைக்கு ஒரு சிறு பகுதியும், டாங்கிப் படைக்கு ஒரு சிறு பகுதியும், மோட்டார் படைக்கு ஒரு சிறு பகுதியுமாக இணைக்கப் பட்டிருக்கின்றன. பீரங்கிப்படை செய்யவேண்டிய வேலையைப் பெரும்பாலும் ஆகாய விமானங்கள் செய்கின்றன. பீரங்கிப்படை போய்ச்சேரமுடியாத தூரங் களில் விமானப்படை தாக்குகின்றன. பாதுகாப்பு வரிசையைத் தாக்குகிறதோடு நிற்காமல், போக்குவரத்து சாதனங்களைத் துண்டித்தும், எதிரியின் பின் வரிசைக்குப் பின்னுள்ள படையையும் தாக்குகின்றன. பீரங்கிப்படை சீக்கிரத்தில் செய்யமுடியாத காரியத்தை விமானங்கள் செய்கின்றன. (ஏனென்றால் பீரங்கிப் படை "டாங்கிகளை"ப்போல விரைவாக ஒரு ஸ்தானத்திற்குப் போய்ச்சேரவோ அல்லது அந்த ஸ்தானத்திலிருந்து மாறவோ முடியாது). ஆனால் அதிக காலம் எதிர்த்துப் போராடும் விரோதியின் படையில் பிளவு உண்டாக்கி காலாட்படை யோடு வேகமாய் முன்செல்ல பீரங்கிப்படை வேண்டியிருக்கிறது.

## ஜெர்மன் பான்ஸர் படை எல்லா சாதனங்களும் அடங்கினது.

சென்ற வருஷத்தில் பிரான்ஸில் நடந்த சம்பவங்களிலிருந்து, டாங்கிகள் ஐரோப்பா கண்டத்தில் உபயோகப்படுத்தி வந்த முறையை ஜெர்மானியர் மாற்றி

விட்டார்கள் என்று தெரியவரும். ஐரோப்பா கண்டத்தில் அதிலும் முக்கியமாக் பிரான்ஸில் முன்னேறிச் செல்லக்கூடும் காலாட்படையை உதவிசெய்ய மோட்டார்கள் உபயோகப்படுத்தப்பட்டன. இதனால் மணிக்கு 3-மைல்தான் போக முடிந்தது. ஆனால் ஜெர்மனியர்களோ இதை மாற்றி டாங்கிகளுக்கு உதவியாக, மோட்டாரில் ஏறிச்செல்லும் காலாட்படையை உபயோகப்படுத்துகின்றனர். இதனால் மணிக்கு 30-மைலுக்கு மேல் ஆய்விட்டது. ஆனால் ராணுவ சாஸ்திரத்தின் முறைப்படி இது பூரா மாறுதல்தான்; இப்பொழுது ருஷ்யாவில் நடக்கும் போரிலிருந்து அது எதிர்பார்க்கப்படாத ஒரு அதிசயமில்லை. "கால்வாய், ஆறு, அல்லது டாங்கிகள் போகாமலிருக்கும்படி கட்டப்பட்டிருக்கும் அகழ்கள், இம்மாதிரி டாங்கிகள் புகுந்து செல்ல முடியாத தடைகளின் அருகாமையில் அவைபோய்ச் சேர்ந்தால் டாங்கிப் படைகள், மோட்டார் படைக்கும், இஞ்சினியர்களுக்கும் சமிக்ஞை செய்து அகழை உடைத்தோ பாலங்கட்டியோ தாண்டும்படி செய்கின்றன. அவைகளின் அங்கமாகிய வெடிகுண்டு விமானங்களுக்கு சமிக்ஞை செய்து (பான்ஸர் பகுதியின் அமைப்பைப்பற்றி மேலே சொல்லிய பிரகாரம்) பாதுகாப்பவர்களை $\frac{1}{2}$ மைல் தூரத்திற்கு இப்பாலே தாக்கித் துளைக்கின்றன.

## பிளிட்ஸ் படையெடுப்பைச் சேர்ந்த இதர தந்திரங்கள்.

மோட்டார்கள், டாங்கிகள், விமானங்கள் இவைகளை மேற்சொல்லிய விதமாக உபயோகப்படுத்துவதுதான், பிளிட்ஸின் முக்கிய தந்திரங்கள். இத்துடன் வேறு சில வகைகள் உண்டு; (1) வேகமாய்ப்போகும் படைகளுக்குச் சமாசாரம் தெரிவிக்க "ரேடியோ" உபயோகப்படுத்தல்; (2) ரகசிய வார்த்தைகளல்லாத சாதாரண வார்த்தைகளால், சுருக்கமான அவசர சமாசாரங்களை அனுப்பித்தல்; அத்தகைய விஷயம் எதிரிகளுக்கும் தெரிந்தபோதிலும், அடிக்கடி யுத்த நிலை மாறிக்கொண்டிருப்பதால் தெரிந்த சமாசாரத்தை எதிரி பிரயோஜனப்படுத்திக் கொள்ள முடியாது; (3) விரோதி பாதுகாப்பவர்களின் பின்னிருந்து, அவர்களைப் பலஹீனப் படுத்த குடைப்படையை ஆகாய மார்க்கமாய் இறக்குவது; (4) பெரும் புகையை விஸ்தாரமாய்ப்போட்டு மறைப்பது; ஆகிய இவைகள்தான்.

## புகை.

ஜெர்மானியர்கள் தங்களை மறைத்துக்கொள்ள புகையை உபயோகப்படுத்துவதில்லை. எதிரிகள் பக்கம் புகையைப்போட்டு, தங்களை அவர்கள் பார்வைக்குப் புலப்படாமல் செய்யப்படுகிறது.

"இது முதலிய சில்லரை உபாயங்கள் அவசியமானாலும் முக்கியமாக டாங்கிகள்தான் ஈட்டிமுனை; மோட்டார் படைகள்தான் ஈட்டி சொருகியிருக்கும் கோல்; மற்ற சாதாரணப்படைகள் ஈட்டியை வேகமாக முன்னால் எறியும் மனிதனின் சரீரம்."

## இவ்வெதிர்ப்பைத் தடுக்க முடியுமா?

இத்தகைய மார்க்கங்களினால் ஜெர்மன் படை பெரிய, பெரிய ஜயங்கள் அடைந்திருப்பதினால் சில கேள்விகளுக்கு இடம் ஏற்படுகிறது. பிளிட்ஸ் எதிர்ப்பை நம்மால் தடுக்க முடியுமா? எப்படி?

முதல் கேள்விக்கு "ஆம்" என்று பதில். ஏனெனில் இரண்டாவது கேள்விக்குப் பதில், ருஷ்யர்கள் அவர்களைத் தடுக்க ஒருவழி கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இதற்கடிப்படையாக இரண்டு உபாயங்களைச் செய்யவேண்டும். ஒன்று முதலாவதாக ஈட்டியென்ற பாகத்தைப் பிளந்தோ, அல்லது ஈட்டியை எறியும் கையிலிருந்து அதைத் தட்டியோ விடவேண்டியது. இரண்டாவதாக எதிரியினுடையஈட்டி பாகத்தை முன்னேறாது தடுக்கவேண்டும். அதே 'பிளிட்ஸ்' முறையில் நாம் திருப்பித் தாக்கும் வரையில் காலதாமதம் செய்யவேண்டும். அதாவது டாங்கிப்படையை மோட்டார் படையிலிருந்து பிரித்து விடவேண்டியது. அது முடியாமல் போனால், மோட்டார் படையைப் பின்தொடர்ந்து வரும் காலாட் படையிலிருந்து பிரித்து விடவேண்டியது. டாங்கிகளைக்கொண்டு மட்டில் ஸ்திரமான ஜயத்தை அடைய முடியாது. டாங்கிகளும் சிறிய வகுப்பு மோட்டார் படைகளும், ஜயித்த இடத்தை வெகுகாலம் கைப்பற்றி வைக்கமுடியாது.

'பிளிட்ஸ்' மின்னல் படைக்குச் சரியான எதிர்ப்பு ஒரு 'வலை' அல்லது 'சல்லடையைப்' போன்ற தற்காப்பு முறையை அனுசரிக்கவேண்டும். கேவலம் தற்காப்புச் சைனியங்களை ஒன்றன்பின் ஒன்றாக அணிவகுத்து நிறுத்தக்கூடாது. 'வலை' என்ற பாதுகாப்பில், ஏதாவது ஒரு பாகத்தில் எதிரியை உள்ளேவிட்டு விடலாம். ஏனென்றால் அந்த பாகத்தில் பிரவேசித்தால் மட்டில் எதிரி ஜயிக்க முடியாது. அதனால் மோசம் வந்து விடாது. முதலிலோ, அடிக்கடியோ விரோதிகள் எதிர்ப்பை மற்ற பாகங்கள் தாங்கும் பக்ஷத்தில் உள்ளே புகுந்த எதிரிக்கு ஆபத்துத்தான். எதிரி இவ்விதம் உள்ளே நுழைந்ததும், 'வலை' போன்ற விரோதிப் படைகளுக்குள் அகப்பட்டுக்கொள்ளுகின்றன. அல்லது 'வலை'யிலிருந்து பிடுங்கிக்கொண்டு போக எத்தனித்தால், தூள் தூளாக அவைகள் நொருங்கி விடுகின்றன. அணிகளை ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்தும் முறை ஏற்கனவே நேசதேசங்களுக்குத் தெரிந்த விஷயம். ஆனால் இப்பொழுது ருஷ்யர்கள் அனுசரிக்கும் முறை வேறு. இவ்'வலை' முறைக்குத் தக்கபடி தனிப்பட்ட இதர சிறு சைனியங்கள் நாலா பக்கங்களிலும் வைக்கப்பட்டிருக்கவேண்டும். இதற்குப் பின்னால் இதைப்போன்ற ரிஸர்வ் சைனியங்களும் உண்டு.

## அம்மாதிரி ருஷ்யா செய்துவிட்டதா ?

இப்பொழுது நடக்கும் ருஷ்ய யுத்த சம்பந்தமாக மேற்கண்ட குறிப்புகள், யுத்த முறையை தெளிவாய் எடுத்துக் காட்டும். ருஷ்யப்படையில் இம்மாதிரி பாதுகாப்பு நடவடிக்கை எடுத்துக்கொண்டதினால் ஜெர்மன் படை அபஜயமடைந்து மின்னல் வேகத்தோடு செல்லாமல் நின்றுவிட்டது.

ஜெர்மானியர்கள் எதிரிப் பிரதேசத்தில் முன்னேறி வருவதை ருஷ்ய அறிக்கைகளிலிருந்து கவனிக்க மேற்சொல்லியபடி ருஷ்யர்கள் எதிர்த்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. குதிரைகள்மேல் சவாரிசெய்த நெபோலியன் விட்பிஸ்கில் 15-நாள் தங்கினதுள்பட சேர்த்துக்கணக்கிட ஸ்மாலென்ஸ்க்குப் போய்ச்சேர நாள்

ஒன்றுக்கு 6-மைல் வீதம் பிடித்தது. ஏழு வாரங்கள் சண்டையிட்ட ஜெர்மானியர்கள், அவர்கள் கைப்பற்றின பிரதேசங்களில் நாள் ஒன்றுக்கு 6-மைல் முதல் 7-மைல் வரையில்தான் முன்னேறி இருக்கிறார்கள். முக்கியமான இடங்களில் ஒரு நாளைக்கு 9-மைல் முதல் 10-மைல் வரை முன்னேறியிருக்கிறார்கள். இம்மாதிரி செய்ததில் அதிக உயிர்ச் சேதமும், பொருள் நஷ்டமும் உண்டாகியிருக்கிறது. இதோடு ருஷ்யர்கள் ஒத்துழைமைக்காவது, பொருளாதாரங்களுக்காவது நஷ்டம் உண்டாகவில்லை. ஆனால் ஜெர்மானியர்கள் இதர இடங்களில் அடைந்த வெற்றியை ஒப்பிட்டுப் பார்ப்போம். போலந்தில் படையெடுத்து, வார்ஸாவைக் கைப்பற்றியதும் பார்க்க ஜெர்மானியர்கள் நாள் ஒன்றுக்கு 12-மைல் வீதம் முன்னேறியிருக்கிறார்கள். பிரான்ஸில் ஸெடானிலிருந்து அபிவில்லிக்கு நாள் ஒன்றுக்கு 16-மைல் வீதம் சென்றிருக்கிறார்கள். அங்கிருந்து தெற்கே ரூபனுக்கும் பாரிஸைக் கைப்பற்றவும் நாள் ஒன்றுக்கு 30-மைல் வீதம் முன்னேறியிருக்கிறார்கள். ட்ரிபோலி, பெங்காஸி இவைகளிலிருந்து டோப்ரூக் ஸோலூம் வரையில் பாலைவனப் பிரதேசமாய் இருந்தால்கூட, இதே 30-மைல் வேகத்துடன் முன்னேறியிருக்கிறார்கள். பால்கன் பிரதேசம் பூராவும், பல்கேரியாவிலிருந்து, யூகோஸ்லாவியாவுக்கும் முன்னேறியிருப்பது நாள் ஒன்றுக்கு 18-மைல் வீதம் கணக்காகிறது. தெற்கே கிரேக்கர்கள் கடும்போர் செய்து பாதுகாத்தும், கடினமான பிரதேசத்திலும், தர்மாப்பொலி, லாமியா இவைகளிலிருந்து ஏதன்ஸுக்கும் நாள் ஒன்றுக்கு 18-மைல் வீதம் சென்றிருக்கிறார்கள். யூரல்ஸ், பாக்கு இவைகள் 1,100-மைலுக்கு அப்பால் இருக்கின்றன. ஒரு நாளைக்கு 10-மைல் வீதம் முன்னேறினாலும், மாரி காலம் வருவதற்குள், ஜெர்மானியர்கள் இந்த இடத்தை அடையமுடியாது.

[குறிப்பு.—ஆனால் ஜெர்மானியர்களைக் காட்டிலும் வெகு வேகமாக பிரிடிஷ் படைகள் வட ஆபிரிக்காவில் முன்னேறியிருக்கின்றன. உதாரணமாக ஜூபாலாண்டுக்கும், அடிஸ் அபாபாவிற்கும் இடையில் 1,000-மைல் விஸ்தீர்ணம். இதெல்லாம் பெரும் பாலைவனம். இருந்தபோதிலும் பிப்ரவரி-மீ 25-ம் தேதியில் ஜூபாலாண்டிலிருந்து புறப்பட்டு ஏப்ரல்-மீ 5-ம் தேதியில் அடிஸ் அபாபாவுக்கு பிரிடிஷ் சைனியங்கள் போய் சேர்ந்தது. இது ஒரு நாளைக்கு 25-மைல் வீதம் கணக்காகிறது.]

முடிவாகக் கூறுவதென்னவென்றால், ஜெர்மன் படைகள் அபாரமானவை; தாக்கமுடியாதவை; போரில் அவர்கள் கை மேலாகவே இருக்கிறது. உலக ஆதிக்கம் கிடைக்கவேண்டுமென்றும், ஜயம் ஏற்படும் என்று ஆசைப்பட்டு சேனைத்தலைவர்கள் சைனியங்களை விரட்டிக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதமான ஆசை, அவர்களை முன்னேறிச் செல்லும்படி தூண்டுகிறது. அல்லது காலதாமதம் ஏற்படுவதில் உலக ஆதிக்கமோ, ஜயமோ, கைக்கெட்டினது வாய்க்கெட்டாமல் போய்விடுமோ என்று அவர்களுக்கு கிலி பிடித்திருக்கிறது. உலகம் பூரா பயந்துகொண்டிருந்த இந்த ராணுவ திட்டத்தை அளவிடப்பட்டு, எதிரிடையாக ஒரு திட்டம் ஏற்படுத்தியாய்விட்டதென்று நாம் சந்தோஷப்படலாம். அதுதான் 'வலை' என்ற

தற்காப்பு முறை. பேராசை பித்துக்கொண்ட ஹிட்லரின் மின்னல் படைக்கும் பான்ஸர் பகுதிகளுக்கும் பதிலளிக்கக்கூடிய பாதுகாப்பு, மன உறுதிகொண்ட தேசத்தார்கள் கைவசமுள்ள வலைப்பின்னல் பாதுகாப்புத்தான்.

---

# வார யுத்தச் செய்திகள்.

---

## 14—8—41-லிருந்து 20—8—41-வரை.

**அட்லாண்டிக்கடலில் சந்திப்பு.**—சென்ற வாரத்தில் மிஸ்ட்டர் சர்ச்சில் பிரிட்டனை விட்டு வெளியே சென்றதற்குக் காரணம் இனி ரகசியமில்லை. இங்கிலாந்திலிருந்து புறப்பட்டுச்சென்று இவர் பிரஸிடெண்டு ரூஸ்வெல்டுடன் அமெரிக்கக் கடற்கரைக்கு அருகில் சந்தித்துப்பேசினர். நோவாஸ்கோஷியாவுக்குச் சமீபத்தில் என்று பிரஸ்தாபம். இந்த இரு ராஜதந்திரிகளும் பிரிடிஷ் பிரின்ஸ் ஆப் வேல்ஸ் என்ற கப்பலிலும், அகஸ்டா என்ற அமெரிக்கக் கப்பலிலும் இருந்து பேசினார்கள். இவர்களுக்கு கலந்துயோசிக்க இரு தேசத்திலிருந்தும் இலாகாத் தலைவர்கள் வந்திருந்தனர்.

**இங்கிலீஷ் அமெரிக்க அறிக்கை.**—இது வரை, பிரிடிஷ் பிரதம மந்திரியும் அமெரிக்க பிரஸிடெண்டும் இவ்விதம் சந்தித்ததேயில்லை. இருவரும் சேர்ந்து ஒரு அறிக்கை வெளிவிடுவதென்று ஒரு முடிவுக்கு வந்தனர். அதன்படி, ஜெர்மனிக்கு எதிரில் சண்டை செய்யும் நேசதேசங்களுக்கு யுத்தத்திற்கு வேண்டிய சாமான்கள் சமீபத்தில் அனுப்புவதோடு, இனிமேல் வருங்காலத்தில் நடக்க வேண்டியதைப்பற்றியும் திட்டம் செய்யப்பட்டது. பொதுவான அம்சங்களும் ராஜீய தர்மங்களும் சர்ச்சை செய்யப்பட்டிருப்பதால் இதை மனித வர்க்கத்திற்கே மஹா சாஸனப்பத்திரம் என்றே சொல்லலாம்.

**எட்டு விஷயங்கள்**—அதில் ஒப்புக்கொள்ளப்பட்டவை:—

1. ராஜ்ஜியங்களை ஆக்கிரமிக்காமல் இருப்பது. (அனாக்கிரமம்).
2. ஏற்கனவே அந்தந்த ராஜ்ஜியங்களுக்கு ஏற்பட்டுள்ள எல்கைகளை பங்கப்படுத்துவதில்லை.
3. தங்களுக்குப்பிடித்த அரசாக்ஷியை வைத்துக்கொள்ள பொதுமக்களுக்கு உரிமை.
4. வியாபாரம் செய்யவும் விளைவுபொருள்களை வாங்கவும் எல்லாருக்கும் பொதுவசதி.
5. பொருளாதாரக் கூட்டுறவு, தொழில் முன்னேற்றம், அபிவிருத்தி செய்வது, தேசீய பயமின்மை.
6. நாஸிக் கொடுங்கோலை ஒழித்து, சமாதான ஸ்தாபனமும், பயம், ஆகாரத் தேவை இல்லாமல் செய்வது.
7. எல்லா கடல்களிலும் சுலபமாக யாவரும் போகவிடுவது.
8. யுத்த முஸ்திப்புக்களைக் குறைப்பது.

இவைகளின்படி இந்த இரு தேசத்தார்களும் அவசியம் நடந்துகொள்ளுவார்கள். ஏனென்றால் ஜனநாயக அரசாங்கத் தலைமை வகிக்கும் இருவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவை. ஆகையால்தான் வில்ஸன் தயாரித்த 14 விஷயங்கள் ஒரு சார்பாருக்கும் அவரவர்கள் சொந்த விஷயமாகவும் இருந்ததுபோல் இவை இருக்காது.

இவ்வறிக்கை நேசதேசத்தார் யாவரையும் உத்ஸாகப்படுத்தி, விரோதிகளை திகைக்கவைக்கிறது. இம்மாதிரியாக உத்ஸாகமளிக்கும் இவ்விருவர்களும் அடிக்கடி சந்தித்து இனி யுத்த சம்பந்தமாகச் செய்யவேண்டியவைகளை சர்ச்சை செய்யவேண்டும். லார்டு ஹாலிபாக்ஸும் இதை அதிகம் விரும்புகிறார். இதற்கு அனுகுணமாக லார்டு பிவர்புருக், ஹாரி ஹாப்கின்ஸ், அவரெல் ஹாரிமன் முதலியோர்களும் சரியான ஆலோசனையினால் பொது தர்மங்களை சர்ச்சை செய்வதுபோல், யுத்த தளவாட உற்பத்தி செய்வது பிறருக்கு உதவுவது முதலிய பிரச்னைகள் ஏற்கனவேயே தீர்மானிக்கப்பட்டன. இவைகளில் ருஷ்யாவுக்கு அவசரமாகத் தேவையான பொருள் கொடுத்து உதவுவதாயும் ஆலோசனை செய்யப்பட்டது.

**சமாதான நிகழ்ச்சி.**—யுத்தத்திற்குப் பிறகு சாச்வதமான சமாதானத்தை ஏற்படுத்துவதில் இவ்வறிக்கை மிகவும் மேலானது. ஏனென்றால் வில்ஸன் 14 விஷயங்கள், சர்வதேச சங்க உடன்படிக்கை (League of Nations) சர்வதேசத் தொழில்கூட்டச் சட்டம் முதலியவையெல்லாம் இவ்வளவு அம்சங்களை உட்கொள்ளவில்லை. இதன்படி வருங்காலத்தில் சத்தியமே வெல்லும், வலியார் அடக்கப்படுவார்கள், கொடுங்கோன்மை ஒழியும். ஆண்பெண் அடங்கிய மனித வர்கத்தையே சீர்படுத்தவும் கஷ்டங்களிலிருந்து மீட்டவும் தேவையான அம்சங்கள் காணப்படுவதால், இது அடையமுடியாத வீண் சொற்பனம் ஆகாது. டைம்ஸ் பத்திரிகை சரியாக சொல்லுவதுபோல் யுத்த முஸ்தீப்புகளைக் குறைப்பதென்றால், ஏற்கனவே தயார் செய்யப்பட்டவைகளை அழிப்பதும் கைப்பற்றுவதும் போதாது. சில சமயங்களில்தான் இவை அவசியமாகும். பெரும்பாலும் யுத்த சக்தியை அடக்கி, பெரும் தொழிற்சாலைகளை ஒருங்கு படுத்தி பொதுமக்களுக்குப் பஞ்சம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளுவதுதான் விரும்பத்தக்கது.

**மூவரசு கூட்டம்.**—ரூஸ்வெல்டு சர்ச்சில் ஒப்பந்தத்தின் பயன் உடனேயே காணப்படுகிறது. மாஸ்கோவில் பிரிடிஷ், அமெரிக்க, ருஷ்ய அதிகாரிகள் ஒன்று சேர்ந்து ருஷ்யாவுக்குத் தற்போது உள்ள தேவையைப்பற்றி தீர்மானிப்பதாக ஸ்டாலினுக்குச் செய்தி அனுப்பப்பட்டது. மாஸ்கோவைச் சீக்கிரத்தில் பிடித்துவிடுவதாக ஹிட்லர் தற்புகழ்ச்சி கொண்டிருக்கும் பொழுது இவர்கள் இப்படி அங்கு கூடுவது கவனிக்கத்தக்கது.

அமெரிக்க-பிரிடிஷ் ஒப்பந்தத்தின் படி 'நீடித்து நடக்கக்கூடிய திட்டம்' என்று ஸ்டாலினுக்கு அனுப்பப்பட்டது. மேலும் பூரணவெற்றி அடைவதற்கு முன் 'அதிகக் கஷ்டங்கள் இருக்கின்றன' வென்றும் அச்செய்தியில் காணப்

பட்டிருந்தது. இச்சண்டை பலமுனைகளில் நடைபெறுகிறது. இன்னும் புதிதாக பலர் இதில் ஈடுபடும்படியாகவும் இருக்கும். நமக்குச் சாமன்கள் ஏராளமாக இருந்தாலும் அதற்கும் ஒரு எல்லை உண்டு. முடிவடைந்த சாமான்களையும், விளைவு பொருள்களையும் எவ்வளவு லாபகரமாக உபயோகப்படுத்த முடியுமோ அதற்குத் தகுந்த திட்டங்களுடன் உபயோகிக்கவேண்டும். ஆகையால் இவர்களுடைய எல்லா சாமான்களும் தேவைக்குத் தக்கவாறு பிரித்து உபயோகிக்க உடனே திட்டம் செய்யப்படும்.

இப்படி ரூஸ்வெல்டு-சர்ச்சில் சந்திப்பு கேவலம் சாமான்கள் ஸப்ளை சம்பந்தமான பிரச்னையை மாத்திரம் நிர்த்தாரணம் செய்ய ஏற்பட்ட போதிலும், அமெரிக்காவுக்குத் திரும்பிப்போய் பத்திரிகை ஆசிரியர்களுக்கு இந்த சந்திப்பினால் அமெரிக்கா முன்னைவிட அதிகமாக யுத்தத்தில் இறங்கவில்லையென்று ரூஸ்வெல்டு சொன்னாலும், சாமான் ஸப்ளை கூட்டுறவிலிருந்து, ராணுவத் தந்திரம், யுத்த திட்டம் முதலியவைகளும் தானாகவே எழும். அவைகளில் அமெரிக்கா நிச்சயமாக கலந்து கொள்ளும்படி நேரிடும். இதை கவனித்துத்தான் ஒப்பந்தத்தின் 6-வது விஷயம் எதிர்ப்பு, தற்காப்பு முறையைப் பற்றியிருப்பதால் பிரிடனுடன் அமெரிக்காவை யுத்தத்தில் ஈடுபடும்படி செய்ததாகவேதான் முடியும் என்று ஸெனடர் ஜான்ஸன் கொடுத்த அபிப்பிராயம் குறிப்பிடத்தக்கது. இவ் அபிப்பிராயத்தைத் தான் ரூஸ்வெல்டும் சந்திப்புக்குப் பிறகு பின்பற்றுகிறார். ஆகஸ்டு 19-ல் நடந்த பத்திரிகை ஆசிரியர்கள் கூட்டத்தில் ஒருவர் ரூஸ்வெல்டை இவ்விதமாகக் கேட்டார். "பிரிடிஷ் பிரதம மந்திரி, நம் உதவியினால் யுத்தத்தில் ஜயிக்கலாமென்றிருக்கிறாரா,?" அதற்கு ரூஸ்வெல்டு, லின்கன் என்பவரின் அபிப்பிராயத்தை மேல்கோளாகக்கொடுத்து ஒரு ஒற்றுமையைக் காண்பித்தார். லின்கன் சொன்னதாவது "யுத்தம் மிகவும் சிரமத்தின்பேரில் செய்யப்படவேண்டுமென்று ஜனங்கள் தெரிந்துகொள்ளவில்லை". அதாவது வந்த சண்டையை இனி ஜயித்தாகவேண்டும். அதற்குப் பொதுமக்கள், சண்டைசெய்ய அனுமதிக்க வேண்டும் என்றும் பிரஸிடெண்டு சரியாகச் சொன்னார்.

**பெர்ரி விமானப் போக்குவரவு.**—டாக்கரையும், கஸாபிலாங்காவையும் ஹிட்லர் பிடிப்பதாக பயமுறுத்தினாலும், இவ்வொப்பந்தத்தின்படி அமெரிக்காவுக்கும், ஆபிரிக்காவின் மேற்குக்கரைக்கும், மத்தியக்கிழக்கு நாடுகளுக்கும் தபால் விமானப் போக்குவரவு அதிகமாக்கப்படும். யுத்தப் பிரதேசத்தை விட்டு விலகி இவை செல்லும். விமானங்களில் சாமான்களை யுத்தப் பிரதேசத்திற்கு அனுப்புவதோடு தளவாடங்களும் செல்லும். டிரினிடாட்டிலிருந்து பிரீடவுனுக்கும், பிரஸீலிருந்து பாதர்ஸ்டு, கார்டூமுக்கும் ஆக இரண்டு பாதைகளில் செல்லலாம், மேலும் அலாஸ்காவிலிருந்து ஸைபீரியாவுக்கு யுத்த சாமான்கள் அனுப்பவும் ஏற்பாடாகி வருகிறது.

**ஹிட்லருக்குப் பேட்டியாக.**—இவ்விதம் பகிரங்கமாக மிஸ்ட்டர் சர்ச்சில் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்தது ஹிட்லர் முடிந்ததைச் செய்யலாமென்று வம்புக்கு இழுத்த மாதிரிதான். நூற்றுக்கணக்கான யு-படகுகள் நெளிந்த அட்லாண்டிக்கடலில் ஒரு எதிரி கப்பலும், விமானமும் தென்படவில்லை.

**ஆங்கில-ருஷ்ய பொருளாதார ஒப்பந்தம்** ஆகஸ்டு 10-ம் தேதி மாஸ்கோவில் கையெழுத்தாகிவிட்டது. அதன்படி சாமான்கள் கடனுக்குக் கொடுத்தும் பேத்துமாத்தல் செய்யவும் ஒரு கோடிப்பவுன்வரை ருஷ்யாவுக்கு பிரிடன் கடனும் கொடுக்கும்.

**அமெரிக்க உதவியும்** ருஷ்யாவுக்குக் கொடுக்கப்படும். குத்தகைக் கடன் மசோதாப்படிக்கில்லாத போனாலும், கிரயம் கொடுத்து சாமான்கள் பெற்றுக் கொள்ளலாம். ருஷ்யச்சண்டை இன்னும் மாரிகாலம், கோடைகாலம் வரையிலும் நடக்குமென்று எதிர்பார்த்து பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு இப்பொழுதும் இனிமேலும் சாமான்கள் அனுப்புவதாக உறுதிகூறினர். ருஷ்யாவுக்குப் போக வேண்டிய எண்ணெய் முதலிய சாமான்களை ஏற்றிக்கொண்டு அமெரிக்கக் கப்பல்கள் புறப்பட்டுவிட்டன.

## ருஷ்ய-ஜெர்மன் யுத்தம்.

**யூக்ரேன்.**—கடைசியாக, அதிகச் சேதத்தின் மேல் கீவிலிருந்து தெற்கு நோக்கி சில தாத்காலிக வெற்றியடைந்ததாகவும், கருங்கடல் துறைமுகமான நிகோலாயிவ்வையும், இரும்பு அகப்படும் இடமான கிரிவாய்ராக் என்ற இடத்தையும் பிடித்ததாக விரோதி அதிக சந்தோஷப்படுகிருன். இங்கிருந்து ஒடெஸ்ஸாவையும் தாக்கி டான் பிரதேசத்தையும் நீபர் நதி வழியாக எதிர்க்கப்பார்க்கிருன். தெற்கே ருஷ்ய சேனைத் தலைவரான ஜெனரல் பூடென்னி ருஷ்யச் சைனியத்தை சிதரவிடாமல் சாமர்த்தியமாக விலக்கிக்கொண்டு நீபர் நதிக்கு கிழக்கே நிற்கிருர் இதுவரை ஜெர்மனி ஏராள நஷ்டங்கள் பேரில் வெற்றிகள் அடைந்ததே ஒழிய, இவை சாச்வதமான ஜயத்தைக் கொடுக்காது. யூக்ரேனின் தென்பாகம் பூரா ஜெர்மானியர் மாண்டு கிடக்கின்றனர். நீபர் நதிக்கரையில் ஸ்மாலென்ஸ்கில் எதிர்த்தது போல் இரு சைனியங்களும் மோதிக் கொள்ளுகின்றன. ஒடெஸ்ஸாவும் டொப்ரூக்கைகைப்போல் முற்றுகை போடப்பட்டு எதிரிக்கு வேண்டிய தொந்தரவைத் தருகிறது. நிகலாயவ்விலிருந்து வெளியேறுவதற்கு முன்னடியே ருஷ்யர்கள், சேமித்த தானியங்களை வெளியே அகற்றிவிட்டு, களம் முதலியவைகளை அழித்து விட்டனர். கப்பல் துறைகள் பாழாக்கப்பட்டு கப்பல்களும் கவுக்கப்பட்டும் அப்புறப்படுத்தவும் பட்டன. ஆகையால் அது ஒரு பாழடைந்த பட்டணமாகத் தானிருக்கிறது. கிரிவாயிலுள்ள நீபர் நதிவரை இரும்புச் சுரங்கங்கள் பரவியிருக்கின்றன. ஒடெஸ்ஸாவிலுள்ள பலமான கோட்டை கொத்தளங்களிலிருந்து ருஷ்யர்கள் தைரியமாக எதிர்க்கின்றனர். தரைவழியாக இவர்களுக்குச் சாமான்கள் தடைபட்டாலும் கருங்கடல் மார்க்கமாக வந்து சேரும். ஒடெஸ்ஸாவுக்கு ஆபத்து வந்தாலும் ஸெபாஸ்டாபூல், பாட்டூம், நோவோரோஸ்ஸிஸ்க் முதலிய இதர துறைமுகங்கள் ருஷ்யாவுக்கு இருக்கின்றன.

முன்னேறுவதைவிட கருங்கடலில் ஜெர்மானியர் செல்லுவதாலும் அவர்களுக்கு அதிகமாக வெற்றி வந்ததாகத் தெரியவில்லை. டெயிலி டெலகிராப் பத்திரிகை சொல்லுவதுபோல யூக்ரேனில் ஜெர்மானியருக்கு, ஆகாராப் பொருள்

களும், சுரங்கங்களும், தொழிற்சாலைகளும் கிடைக்கவில்லை. ருஷ்யர்கள் யாவற்றையும் கொளுத்திவிட்டனர். ருஷ்யச் சைனியமும் முறிபடவில்லை. மேலும் யூரல், ஸைபீரியா முதலிய பிரதேசங்கள் இருப்பதால் யூக்ரேனை ஜெர்மானியர் பிடித்தாலும் பாதகமில்லை. ஆனதால் ஜெர்மானியர்கள் பிடிக்கும் நாடுகளில் சாம்பலும் தூசியும்தானிருக்கின்றன.

**லெனின்கிராட்.**—மேலும் லெனின்கிராட்டுக்கு தென்மேற்கில் 70 மைலிலிருந்து ருஷ்யச் சைனியம் கிங்கிஸாப்பிற்குள் புகுந்து பழைய ருஷ்ய தற்காப்பு வரிசைகளிலிருந்து மார்ஷல் ஒரோஷிலவ் என்பவரின்கீழ் பாதுகாத்துவருகிறது. எஸ்தோனியா என்ற இடத்திலிருந்து ஜெர்மன் சைனியம் பாய்கிறது. இது ருஷ்யாவின் பழைய எல்லையாகும்.

## தூரக்கிழக்கு.

அநேகமாக இங்கே ஒரு விசேஷ சம்பவமும் இல்லை. இருந்தாலும் இனிமேல் ஏதாவது நடக்கலாம். இதற்குள் பிரிடன் தாய்லாந்தை, ஆரண்யப் பிரதேச இருப்புப் பாதையை பிரிடன் உபயோகத்திற்குக் கொடுக்கவேண்டுமென்று பயமுறுத்தியதாகப் புரளிப் பிரஸ்தாபம் பரவி வருகிறது. ஆனால் பிரிடன், இதெல்லாம் வீண் புரளிப் பேச்சு என்று வதந்தியை மறுத்துவிட்டது. தாய்லாந்தில் சில அவசரச் சட்டங்கள் அமுலுக்குக் கொண்டுவரப்படும்போல் இருக்கிறது. பொருளாதாரச் சீர்திருத்தத்திற்காகவும், போக்குவரவு இலாகா மந்திரி ஒருவரை நியமிக்கவும் சென்ற வாரத்தில் மிகவும் அவசரமாக சட்டசபையில் பாஸ்செய்தார்கள். அதற்குக் காரணம் கூறுகையில் தாய்லாந்திற்கு அருகில் ஆபத்து வந்துவிட்டதாகச் சொல்லப்பட்டது. இந்தோ-சைனா அநேகமாக ஒரு ராணுவ நிலயமாக ஆகிவருகிறது.

அமெரிக்காவுக்குப் போகவிருந்த 100 பொதுமக்களை ஜப்பானியர் அனுப்ப மறுத்துவிட்டதால் அமெரிக்க 'பிரிஸிடெண்டு கூலிட்ஜ்' என்ற கப்பல் ஜப்பானுக்குப் போகவில்லை.

## பிரிடிஷ் விமானப்படை.

**பிரிடிஷ் விமானப்படையும்** அச்சுநாட்டுப் பிரதேசங்களை சற்றும் களைக்காமல் தாக்கி வருகிறது. சென்ற வாரத்தில் முக்கியமாக பெர்லின், மாக்டபெர்க், ஹனோவர், எஸ்ஸன், கீல், ப்ரெமன், ஆஸ்னேபுருக், டேயிஸ்பர்க், கோலோன், லா டிரயிட், பிரன்ஸ்விக், ஸிராகூயூஸ் என்ற இடங்களில் குண்டுகள் வீசப்பட்டன.

## கடல் யுத்தம்.

அமெரிக்கர்கள் காவல்புரிய ஆரம்பித்த முதல் ஐஸ்லாந்திலிருந்து அமெரிக்காவுக்கும் இடையில் விரோதி நடமாட்டமே இல்லை. நேசதேசக் கப்பல்கள் நிறுத்தப்படவுமில்லை, சேதமாக்கப்படவும் இல்லை.

## மத்தியக்கிழக்கு.

**அராபிய நாடுகள்.**—ரஷீத் ஆலியின் புரட்சிகளைத் தவிர, நாஸி ஐந்தாம் படையின் வேலையெல்லாம் அடக்கப்பட்டது. முஸ்லீம் மதத்திற்கு விரோதமாக ருஷ்யாவுக்கு பிரிடன் உதவுவதும், கம்யூனிஸ்ட் கக்ஷிக்கு ரூஸ்வெல்டு உதவுவதும் பிசகென்று முகமதிய நாடுகளில் கிளப்பும் வதந்திகளை அங்குள்ளவர்கள் நம்பவில்லை.

**இரான்.**—இரான் கவர்ன்மெண்டைத் தொலைக்கச்செய்த ஜெர்மன் ரகசியச் சூழ்ச்சிகள் ஆகஸ்டு 15-ல் கண்டுபிடிக்கப்பட்டதால் ஜெர்மன் உயர்தர உத்தியோகஸ்தர்கள் 'தேக அசௌக்கியம்' என்று பொய்க் காரணம் கூறி வேலையிலிருந்து விலகி வருகிறார்கள். நாஸிக் கக்ஷிக்குட்பட்ட இரானிய இளம் மாதுகளும், உத்தியோகஸ்தர்களும் கைதி செய்யப்பட்டனர். இன்னும் கொஞ்ச நாட்களில் 5,000 நாஸி ஐந்தாம்படையைச் சேர்ந்தவர்கள் தேசபிரஷ்டம் செய்யப்படுவார்கள் என்று நம்பப்படுகிறது. அதற்கு ருஷ்ய-ஆங்கிலேய அரசாங்கம் தேவையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

## விஷி.

'புது திட்டத்தை' அமுலுக்குக்கொண்டுவர பிடேன் செய்த பிரசங்கத்தின் மேல் ஜெர்மனி ஆக்கிரமிக்காத பிரான்ஸில் கலகங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

கைதியாயுள்ள பாக்கி 35 பிரிடிஷ் உத்தியோகஸ்தர்களை விடுவித்தால்தான் ஜெனரல் டென்ட்ஸ் விடுவிக்கப்படுவார் என்று பிரிடன் விஷிக்குச் சொல்லிவிட்டது.

## சைனிய உத்தியோக நீடிப்பு மசோதா.

ஆகஸ்டு 18-ம் தேதி பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு இன்னும் $1\frac{1}{2}$ வருஷ காலம் சைனியத்தில் வேலைபார்த்துவரும் (கட்டாய ராணுவ சேவை செய்பவர்கள்) ஸெலக்டீகளையும், தேசப் பாதுகாப்பினர்களையும், மேன் படையாளர்களையும் வைத்துக்கொள்ள ஒரு மசோதாவில் கையெழுத்து செய்துவிட்டார்.

## பி. பி. ஸி.

ஜெர்மன் உத்தியோகஸ்தர்களுக்கு பி. பி. ஸி. அதிக பயத்தைச் செய்கிறது. இதை ஜெர்மனியில் கேட்கிறவர்கள் கொல்லப்படுவார்களாம். ஜெர்மன் பிரசார மந்திரி பின்வருமாறு சொல்லுகிறார். "பி. பி. ஸி. பிரசார மூலம் பிரிடிஷார் ஜனங்களுக்கு ஹிட்லர்மேல் அதிருப்தி விளைவிக்கப் பார்க்கிறார்கள்"

## சத்துருவினுடையவும், சத்துருவினல் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேச தேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 11—8—41. (திங்கட்கிழமை). | | | |

### ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| இரவில்.—லக்ஷியங்கள்—கிரெபெல்டு (Krefeld). | ...... | ...... |
| எடல்ஸ்டின் எஃகு தொழிற்சாலைகள்.—ரெயிடு (Rheyd). | ...... | ...... |
| மூன்சென் (Munchen).—கிளாட்பாச் (Gladbach). | ...... | ...... |
| விமான நிலயங்கள், கட்டடங்கள், நாடோடிகள்.—வடபிரான்ஸ் (France), ஹாலந்து (Holland). | ...... | சேதமாயின. |
| கப்பல் துறைகள்.–ராட்டர்டாம் (Rotterdam). | நஷ்டமில்லை. | ...... |

### இதாலி (Italy).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| எண்ணெய் தொட்டிகள், ரசாயன சாலைகள்.—கிரோடோன் (Crotonne). | ...... | பூராவும் தீக்கிறையாயின. |
| ராணுவக் கட்டடங்கள்.-காரியட்டி (Cariati). | நஷ்டமில்லை. | ...... |

### இதாலிய ஆபிரிக்கா (Africa).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| விமானமிறங்குமிடங்கள்.—கஸாலா (Gazala). | ...... | ...... |
| ராணுவக் கட்டடங்கள்.-பார்டியா (Bardia.) | ...... | கட்டடங்கள் அழிக்கப்பட்டன. |
| துறைமுகம்.—டெர்ன (Derna) ... | ...... | ...... |
| துறைமுகம், துறைமுகக் கட்டடங்கள், மின்சார உற்பத்தி சாலை.—ட்ரிபோலி (Tripoli). | ...... | ...... |
| மோட்டார் போக்குவரத்து.—ட்ரிபோலி (Tripoli)க்கு அருகாமையில். | 1 விமானம். | அநேகம் சேதமாயின, |

### ருஷ்ய விமானங்களால்.

### கிழக்குப் போர்முனை.

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| விரோதியின் காலாட்படை, யந்திர சாதனப் படை.—யுத்தரங்கம் பூராவும். | 34 விமானங்கள். | 41 விமானங்கள். |

### பின்லாந்து (Finland).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| பட்டிணங்கள்.—பின்லாந்தில் (Finland). | ...... | ...... |

### ஜெர்மனி (Germany).

| லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|
| பெர்லின் (Berlin) ... | நஷ்டமில்லை. | பலத்த சேதம். |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| 12—8—41. (செவ்வாய்க்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | காலையில்.—மின்சார யந்திரசாலைகள்—கோலோனி (Cologne) லுள்ள க்வாட்ராத் (Quadrath), நீடாக் (Kneatack). | …… | பெருந் தீக்கள் மூட்டப்பட்டன. |
| | பகலில்.—இருப்புப் பாதைகள்—ஸெயிண்ட் ஓமர் (St. Omer)க்கருகாமையில். | …… | …… |
| | மின்சார யந்திரசாலை.—காஸ்நே (Gosnay)க் கருகாமையில். | …… | சேதம். |
| | ஒரு விமான நிலயம்.—டிகூய் (Dekooy). | 12 பகல் 'பாம்பர்' களும். | …… |
| | ராணுவ லக்ஷியங்கள்.—கோலோன் (Cologne). | 8 பகல் 'பைடர்' விமானங் களும். | 3 'பைடர்' விமானங் கள். |
| | துறைமுகம்.—எம்டன் (Emden). | …… | …… |
| | இரவில்.—பெர்லின் (Berlin), ஜெர்மனியின் தலைநகர். | …… | பெருந் தீக்கள் மூட்டப்பட்டன. |
| | கைத்தொழில்.—மாக்டிபர்க் (Magdeburg), ஹனோவர் (Hancver) ஜில்லாக்களில். | …… | சேதமாயின. |
| | க்ருப் (Krupp), யுத்த தளவாடங்கள் செய்யுமிடங்கள்.—எஸ்ஸன் (Essen). | …… | தீ மூட்டப்பட்டது. |
| | ராணுவ லக்ஷியங்கள்.—ஸ்டெடின் (Stettin), கீல் (Kiel), ப்ரெமன் (Bremen), ஆஸ்னபுருக் (Osnabruck) டூயிஸ்பர்க் (Duisburg), கோலோன் (Cologne). | …… | …… |
| | விமான நிலயங்கள்.—ஹாலந்து (Holland). | 13 இரவு 'பாம்பர்' விமானங்கள். | …… |
| | கப்பல் துறைகள்.—லஹாவர் (Lehavre). | …… | …… |
| | விரோதி விமான நிலயங்கள்.—விரோதி ஆக்கிரமித்த பிரதேசத்தில். | …… | …… |
| | துறைமுகங்களிலுள்ள கப்பல்கள், ஒரு விமான நிலயம்.—நார்வே (Norway). | …… | …… |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | சுங்கவரி இலாகா, மோட்டார் போக்குவரத்து தொழிற்சாலைகள்.—பார்டியா (Bardia), டெர்ணா (Derna). | …… | கஸ்டம் ஹவுஸுக்குச் சேதம். |
| | ரயில்வே ஸ்டேஷன்.—ட்ரிபோலி (Tripoli). | …… | நாசமாக்கப்பட்டது. |
| | மோட்டார் போக்குவரத்து.—பெங்காஸி (Benghazi)க்குப் போகும் கடற்கரைப் பாதை. | …… | பீரங்கியால் தாக்கப் பட்டது. |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **12—8—41.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | **விமான நிலயங்கள், தரையிலிருக்கும் விமானங்கள்.**—*கடானியா* (Catania), *ஜெர்டயின்* (Gerdine). | ... | 1 *விமானம்; தரையிலிருக்கும் பல விமானங்கள் சேதமாயின.* |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | **கிழக்குப் போர்முனை.** | | |
| | யந்திரப்படை, காலாட்படை, பீரங்கிப் படை.—*யுத்தரங்கம் பூராவும்.* | ... | ...... |
| | **விமானப் போர்கள், விமான நிலயங்களிலிருக்கும் விமானங்கள்.**—*யுத்தரங்கம் பூராவும்.* | 35 *விமானங்கள்.* | 43 *விமானங்கள்.* |
| **13—8—41.** (புதன்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | சாயந்திரம்.—கப்பல் கட்டுமிடங்கள், கப்பல்.—*லெட்ரெயிட்* (Letrait). | ... | 1 *யுத்தக் கப்பல் தாக்குண்டது.* |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | கவர்ன்மெண்ட் கட்டடங்கள்.—விமானம் சுடும் பீரங்கிகள் வைக்குமிடம்—*ட்ரிபோலி* (Tripoli). | ... | ...... |
| | விரோதி மறையும் பள்ளங்கள், கட்டடங்கள்.—*வுலிஹிபிட்* (Wolehefit). | ... | ...... |
| | ராணுவ நிலயங்கள்.—*கோண்டார்* (Gondar). | ... | ...... |
| | **கிரீஸ் (Greece).** | | |
| | காரின்த் (Corinth) கால்வாய்.—*கிரீஸ்* (Greece). | ... | ...... |
| | **கிரீட் (Crete).** | | |
| | விமான நிலயம்.—*ஹெராக்கிலியான்* (Heraklion). | ... | ...... |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | ஸப்மரைன் (Submarine) தளம்.—*அகஸ்டீ* (Auguste.) | ... | *துறைமுக மேடை மட்டில் தீ மூட்டப்பட்டது.* |
| | சைனிய வாஸஸ்தலம்.—*ஸிராக்கூஸ்* (Syracuse). | 1 *விமானம்* | *தீக்கள் மூட்டப்பட்டன.* |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **13—8—41.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | காலாட்படை, விமான நிலயங்களிலிருக்கும் **விமானங்கள்.** ஆகாய சிறு சண்டைகள்.—*யுத்தரங்கம் பூராவும்.* | 27 *விமானங்கள்.* | 74 *விமானங்கள்.* |
| **14—8—41.** (வியாழக்கிழமை). | | | |
| | **ஜேர்மனியும், ஜேர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—விமான எதிர்ப்பு—*வட பிரான்ஸின் கடற்கரையில்.* | 3 *பகல் 'பைடர்' விமானங்கள்* | 13 *பகல் 'பைடர்' விமானங்கள்.* |
| | கப்பல் துறைகள்.–*போலாயின்* (Boulogne). | ...... | ...... |
| | ஒரு ஸப்ளைக் கப்பல்—*பிரிஸியன்* (Frisian) *தீவுகளுக்கப்பால்.* | 1 *விமானம்.* | *மூழ்கடிக்கப்பட்டது.* |
| | இரவில்.—*கைத் தொழில்கள் போக்குவரத்துகள்—ஹனோவர்* (Hanover), *பிரன்ஸ்விக்* (Burnswick), *மாக்டிபர்க்* (Magdeburg). | ...... | *பெருந் தீக்கள் மூட்டப்பட்டன.* |
| | கப்பல் துறைகள்.–*ராட்டர்டாம்* (Rotterdam), *போலாயின்* (Boulogne). | 12 *விமானங்கள்.* | ...... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | நாசகாரிகளால் துணை புரியப்பட்ட 5 வியாபாரக் கப்பல்கள்—*மத்தியதரைக் கடலில்* (Mediterranean). | ...... | *3 கப்பல்களும் 1 நாசகாரியும் தாக்கப்பட்டன.* |
| | **ஸிஸிலி (Sicily)** | | |
| | கப்பல்கள், சாமான் ஏற்றும் வண்டிகள். சாமான்கள், இப்புப் பாதை மோட்டார் போக்குவரத்து—*கடானியா* (Catania). | ...... | *பலத்த சேதம்.* |
| | ரயில் வண்டிகள் நிற்குமிடம்—*அகஸ்டீ* (Auguste). | ...... | ...... |
| | விமான நிலயங்கள்—*ஜெர்பினி*, (Gerbini), *டிரபானி* (Trapani). | 2 *விமானங்கள்.* | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | *பெங்காஸி* (Benghazi). | ...... | ...... |
| | **ருஷ்ய விமானங்களால். கிழக்குப் போர்முனை.** | | |
| | விரோதி சைனியம், விமான நிலயத்திலிருக்கும் விமானங்கள்—*யுத்தப் பிரதேசம் பூராவும்.* | 11 *விமானங்கள்.* | 26 *விமானங்கள்.* |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **15—8—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | இரவில்.—கப்பல்கள், கப்பல் துறைகள்.—*ப்ரெஸ்ட்* (Brest). | ...... | ...... |
| | **ஸிஸிலி (Sicily).** | | |
| | ரயில்வே ஸ்டேஷன் சுங்கவரி இலாகா கட்டடங்கள், கடைகள்—*கடானியா* (Catania). | ...... | *வெடிகளும், தீயும் கிளம்பின.* |
| | துறைமுகம்.—*ஸிராகூயூஸ்* ... | ...... | ...... |
| | **இதாலிய ஆபிரிக்கா (Africa).** | | |
| | விமான நிலயங்கள்—*பெர்கா* (Berka), *பெனிஞ* (Benina). | ...... | *தரையிலிருந்த விமானம் சேதமாக்கப் பட்டது.* |
| | துறைமுகம்—*பார்டியா* (Bardia) ... | ...... | ...... |
| | துறைமுகம், கப்பல்கள்—*பெங்காஸி* (Benghazi). | ...... | ...... |
| | விரோதி பீரங்கிகள் இருக்குமிடம்.—*டோப்ருக்* (Tobruk)*கில் நம் நிலயங்களுக்குக் கிழக்கில்.* | ...... | *பீரங்கிகள் அடக்கப் பட்டன.* |
| | விமானப் போர்—*காம்பூத்* (Gambut) ... | ...... | 1 *விமானம்.* |
| | **ருஷ்ய விமானங்களால்.** | | |
| | கிழக்குப் போர்முனை. | | |
| | விரோதி சைனியமும், விமான நிலயத்தில் இருக்கும் விமானங்களும்,—*யுத்தரங்கம் பூராவும்.* | 24 *விமானங்கள்.* | 29 *விமானங்கள்.* |
| | **ஜெர்மனி (Germany).** | | |
| | *பெர்லின்* (Berlin) ... | *நஷ்டமில்லை.* | *சேதமாக்கப்பட்டது* |
| **16—8—41.** (சனிக்கிழமை). | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.** | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள் — *இங்கிலீஷ் கால்வாய்* (English Channel), *பிரஞ்சுக் கடற்கரை* (French Coast), *வட பிரான்ஸ்* (France). | ...... | ...... |
| | இருப்புப்பாதை மூலம் போக்குவரத்துகள், விமான நிலயம்—*ஸெயிண்ட் ஓமர்* (St. Omer)*க்கு அருகாமையில்.* | 4 *பகல் 'பைடர்' விமானங்கள்.* | 19 *பகல் 'பைடர்' விமானங்கள்.* |
| | ஒரு பாராக்கொடுக்கும் கப்பல்—*ஹாலந்து* (Holland) *கடற்கரைக்கப்பால்.* | 1 *விமானம்.* | ...... |

| தேதி. லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; விமான படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|

**16—8—41.** (சனிக்கிழமை)—தொடர்ச்சி.

## ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| இரவில்.-உற்பத்திசாலைகள்—கோலோன் (Cologne), டஸ்ஸல்டார்ப் (Dussel Dorf), டூயிஸ்பர்க் (Duisberg). கப்பல் துறைகள்-ராட்டர்டாம் (Rotterdam), ஆஸ்டெண்டு (Ostend). | ...... 13 விமானங்கள். | ...... 1 விமானம். |

## ஸிஸிலி (Sicily).

| | | |
|---|---|---|
| துறைமுகம், ரயில்வண்டிகள் பாதை மாறுமிடங்கள்—ஸிராகூஸ் (Syracuse). | ...... | துறைமுகம் பூராவும் தீப்பிடித்தது. |
| சைனியம் வசிக்குமிடங்கள்—காப்பஸாரோ (Cap Passaro). | ...... | ...... |
| கடல் விமானங்கள்-ஸிராகூஸ் (Syracuse) துறைமுகத்தில். | ...... | 1 கடல் விமானம் நாசமாயிற்று; இன்னும் அநேகம் சேதமாயின. |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| கோட்டைகள், கட்டடங்கள், மறைந்துள்ள பள்ளங்கள்—வல்ஹிபிட் (Wolchefit), டெபரெக் (Debarech). | 1 விமானம். | ...... |

## ருஷ்ய விமானங்களால்.

### கிழக்குப் போர்முனை.

| | | |
|---|---|---|
| விரோதி சைனியம், விமான நிலயங்களிலிருக்கும் விமானங்கள்—யுத்தரங்கம் பூராவும். | 12 விமானங்கள். | 19 விமானங்கள். |

**17—8—41.** (ஞாயிற்றுக்கிழமை).

## ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்திருக்கும் ஐரோப்பாவும்.

| | | |
|---|---|---|
| பகலில்.—அநேக விமான எதிர்ப்புகள்—இங்கிலீஷ் கால்வாய்கள் (English Channel), வட பிரான்ஸ் (France). | 2 பகல் விமானங்களும் 1 பகல் 'பாம்பர்' விமானமும். | 7 'பைடர்' விமானங்கள். |
| விரோதி 'டாங்கி'ப்படை—டோக்வட் (Touquet) க்குப்பால். | ...... | நேராகத்தாக்கப் பட்டது. |
| இரவில்.-துறைமுகம்—ப்ரெமன் (Bremen). | ...... | சேதமாயிற்று. |
| உற்பத்திசாலைகள்—டூயிஸ்பர்க் (Duisberg). | ...... | தீப்பிடித்தது. |
| இதர லக்ஷியங்கள்—ஜெர்மனி (Germany) க்கு மேற்கிலும், வடமேற்கிலும். | ...... | ...... |

| தேதி. | லக்ஷியங்கள். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | எதிரிகளின் விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **17—8—41.** (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி. | | | |

## இதாலிய ஆபிரிக்கா (Africa).

| | | |
|---|---|---|
| துறைமுகம், கப்பல்கள், ரயில்வண்டிகள் பாதை மாறுமிடங்கள்—*பெங்காஸி* (Benghazi). | …… | *வெடிகளும் தீயும், கிளம்பின.* |
| துறைமுகம், கோட்டை—*ட்ரிபோலி* (Tripoli) | …… | …… |
| விரோதி சதானங்கள், கட்டடங்கள் பாஸிஸ்டு (Fascist) முக்கியஸ்தலம்.—*வுல்ஹிபிட்* (Wolchefit), *டெபரெக்* (Deberech), *கோண்டார்* (Gondar), *அபிஸீனியா* (Abyssinia) *பிரதேசங்கள்.* | 2 *விமானங்கள்.* | *பெருந்தீக்கள் மூட்டப்பட்டன.* |

### ருஷ்ய விமானங்களால்.

## கிழக்குப் போர்முனை.

| | | |
|---|---|---|
| விரோதி யந்திர சாதனப்படை, காலாட்படை, பீரங்கிப்படை, விமான நிலயங்களிலிருக்தும் விமானங்கள்.—*யுத்தரங்கம் பூராவும்.* | 18 *விமானங்கள்.* | 22 *விமானங்கள்.* |

## ருமேனியா (Rumania).

| | | |
|---|---|---|
| எண்ணெய் சுரங்கப் பிரதேசம்.—*போலஸ்டி* (Polesti). | …… | *தீப்பிடித்தது.* |

## கருங்கடல் (Black Sea).

| | | |
|---|---|---|
| விரோதி போக்குவரத்துக் கப்பல்கள்.—*கருங்கடல்* (Black Sea). | …… | 2 *போக்குவரத்துக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. மற்றொன்று தீப்பிடித்தெரிந்தது.* |

### பிரிடிஷ் விமானங்களால்.

## மத்தியதரைக்கடல் (Mediterranean).

| | | |
|---|---|---|
| விரோதி வியாபாரக் கப்பல்கள் துணையுடன் கூடிய எண்ணெய் கப்பல்.—*மத்யதரைக்கடல்* (Mediterranean). | …… | 2 *கப்பல்களும், எண்ணெய் கப்பலும் பூராவும் நாசமாக்கப்பட்டன.* |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **12—8—41.** (செவ்வாய்க்கிழமை). | | | |
| | பகலில்.-வேல்ஸ் (Wales)ன் தென்பாகம் கிழக்கு ஆங்கிலியா (East Anglia). இங்கிலாந்தி (England)ன் வடமேற்கு பாகம். | ...... | ...... |
| | இரவில்.—சில இடங்கள்—இங்கிலாந்தின் (England) நடுப்பிரதேசங்களும், கிழக்குப் பாகமும். | ...... | சேதம். சிலருக்குக் காயம். |
| | **சைப்ரஸ் (Cyprus).** | | |
| | நிகோஸியா—(Nicosia), பாமகுஸ்டா (Famagusta). | ...... | சேதமில்லை, ஒருவருக்கும் காயமில்லை. |
| **13—8—41.** (புதன்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | பகலில்.—இங்கிலாந்தி (England)ன் வடகிழக்குக் கரை. | ...... | ...... |
| | இரவில்.—எங்கும் விமான நடமாட்டமே இல்லை. | ...... | ...... |
| | **சைப்ரஸ் (Cyprus).** | | |
| | நிகோஸியா (Nicosia) ... | ...... | ஒருவர் கொல்லப்பட்டார்; 3 பேருக்குக் காயம். |
| | **எகிப்து (Egypt).** | | |
| | ஸூயஸ் (Suez) கால்வாய் பிரதேசம். ... | ...... | 7 பேர் கொல்லப்பட்டனர்; 9 பேருக்குக் காயம். சேதம் இல்லை. |
| **14—8—41.** (வியாழக்கிழமை). | | | |
| | தகவலில்லை. | ...... | ...... |
| **15—8—41.** (வெள்ளிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | இரவில்.—ஓர் இடம்—கிழக்கு ஆங்கிலியா (East Anglia) | ...... | சேதமில்லை. ஒருவருக்கும் காயம் இல்லை. |
| | **சைப்ரஸ் (Cyprus).** | | |
| | நிகோஸியா (Nicosia) ... | ...... | 22 பேர் காயமடைந்தனர். |

| தேதி. | லக்ஷியங்கள். | விரோதிகளின் விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டமும்; படையெடுப்புகளால் விளைந்த சேதமும். |
|---|---|---|---|
| **15—8—41.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow) ... | விரட்டப் பட்டது. | சேதமில்லை. |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | மால்டா (Malta) 4 தடவைகள் ... | ...... | சொற்பச்சேதம். |
| **16—8—41.** (சனிக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | **பகலில்.**—ஸ்காத்லாந்தி (Scotland)ன் வடகிழக்கு, கிழக்குப் பாகங்கள். | 1 'பாம்பர்' விமானம். | சிறிது சேதம்; சில ருக்குக் காயம். |
| | **இரவில்.**—இங்கிலாந்தி (England)ன் தென் கிழக்கு கிழக்குக் கரைகள். | ... | ... |
| | **சில இடங்கள்.**—நடுப்பிரதேசங்கள் ... | ... | சிறிது சேதம்தான். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow) ... | 1 விமானம். | விரட்டப்பட்டது. |
| **17—8—41.** (ஞாயிற்றுக்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | **இரவில்.**—கடற்கரைப் பிரதேசங்கள்—இங்கிலாந்தி (England)ன் கிழக்கு, தென் மேற்குப் பாகங்கள். | ... | சிறிது சேதம்; சில ருக்குக் காயம் தான். |
| | ஹல் (Hull) ... | 1 'பாம்பர்' விமானம். | ... |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean).** | | |
| | **கப்பல்கள்.**—எகிப்து (Egypt) கடற்கரைக் கப்பால். | ... | சேதமில்லை. |
| | **அட்லாண்டிக் (Atlantic).** | | |
| | **பிரிடிஷ் துணைக்கப்பல்கள்.**—அட்லாண்டிக் (Atlantic) | 1 விமானம். மற்றொன்று சேதம். | ஒரு கப்பலுக்கும் சேதமில்லை. |
| **18—8—41.** (திங்கட்கிழமை). | | | |
| | **பிரிடன் (Britain).** | | |
| | **இரவில்.**—ஓர் இடம்—வட கிழக்கு ஸ்காத்துலாந்து (Scotland). | ... | ... |
| | **இரண்டு இடங்கள்.**—வடகிழக்கு இங்கிலாந்து (England). | ... | சிலருக்குக் காயம்; சிலர் கொல்லப்பட்டனர். |
| | **ருஷ்யா (Russia).** | | |
| | மாஸ்கோ (Moscow) ... | ... | சேதமில்லை. |

# யுத்தக் குறிப்புகள்.

**மாரி காலத்திற்குள் சமாதானமாம்.** மாரி காலத்திற்குள் ஜெர்மன் வில்ஹெல்ம் ஸ்ட்ராஸி, ஜெர்மன் அரசாங்கம், ஜெர்மானியர் யாவரும், சமாதானம் நிச்சயமாக ஏற்படுமென்ற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள் என்று தெரியவருகிறது! சாமர்த்தியமாகவும், விடாமலும் செய்துகொண்டிருக்கும் பிரசாரம்தான் இதற்குக் காரணம். (இப்பிரசாரமெல்லாம் சம்பந்தமல்லாதது வெறும் பொய்). மேலும் நம் விரோதிகள், நம்மாலும் மற்றுமுள்ள நாடுகளாலும் சந்தேகப்பட்ட விஷயங்களை சர்வ நிச்சயமென்று எண்ணும் விசித்திர ஸ்வபாவம் கொண்டிருக்கிறார்கள்.

ருஷ்ய யுத்தத்தைப்பற்றி ஜெர்மன் பொதுமக்களுக்கு அதிகாரிகள் விஷயசமர்ப்பணம் செய்யும் விதத்தை சற்று ஆராய்வோம்:—

ருஷ்யாவோடு சண்டை ஆரம்பித்தபொழுது, ஏதோ சுலபமாக, ருஷ்யாவில், ஜெர்மன் சைனியம் முன்னேறி நடத்திச் செல்லலாம் என்று சொல்லப்பட்டனர். இவ்விதமாக வெற்றிகரமாக லெனின்கிராட், மாஸ்கோ, பட்டிணப் பிரவேசம் செய்யும்போது கட்டாயத்தின் பேரில் ருஷ்யர்கள் தாங்களாகவே ஒப்பந்தத்துடன் சமாதானம் செய்ய முன்வருவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும், ஜெர்மனி புது திட்டத்தை ஐரோப்பாவில் ஸ்தாபிக்க ஐரோப்பிய நாடுகள் முழுவதும் ஒன்று சேரும் என்றும் போல்ஷிவிஸம் முற்றிலும் ஒழிக்கப்படும் என்றும் சொன்னதை ஜெர்மானியர் ஒப்புக்கொண்டு நம்பியிருந்தனர்; ஏனென்றால் ஐரோப்பாவுக்கே ஜெர்மனி ஏதோ பெரும் உதவி செய்திருக்கிறதாம்.

அப்படி அற்பமாக நினைத்ததால் ஜெர்மன் சைனியங்களுக்கு அபார கஷ்டங்கள் உண்டாகியிருப்பதை ஜனங்கள் உணர்ந்தவுடன், அதிகாரப் பிரசாரகர்கள், பொது மக்களின் ஏமாந்த அபிப்பிராயத்தை "மாரி காலத்திற்கு முன் சமாதானம்" என்று வழிக்குத் திருப்புகின்றனர். உதாரணமாக ஜுலை 20-ம் தேதி டாஸ்ரீஷ் என்ற பத்திரிகை ருஷ்யச் சைனியம் "மறைவில் பதுங்கிப் பாய்வது" என்ற முறையைக் கையாண்டிருப்பதாகக் காலதாமதத்திற்குக் காரணம் சொல்லிற்று. ஜுலை 27-ல் பிராங்க் பூர்டர், ஜீடங், ஜெர்மன் பான்ஸர் படை தன் பின்புறத்தை எப்பொழுதும் காபந்து செய்து கொண்டு, 'அலைகளுக்குச் சமமான ருஷ்யப் படையுடன் சண்டை செய்ய வேண்டியிருப்பதாக' மற்றொரு காரணத்தை வர்ணித்தது. அதே தினம், பெர்லினில் உள்ள போர்ஸன் ஜீடங்க் பத்திரிகை, "ஜெர்மன் மோட்டார் படையாலும், டாங்கிகளாலும் இம்முறை சண்டை செய்தால் மட்டும் போதாது. பூராவான ஜெர்மன் சைனியத்தை ருஷ்யர்கள் சண்டையில் ஈடுபடும்படி செய்கின்றனர்" என்று ஒத்துக்கொண்டு சொல்லிற்று. இந்தச் சமயம் அநேகமாக மோட்டார் உதவியில்லாத காலாட் படையும், குதிரையிழுக்கும் வண்டிகளும், யந்திரங்களும்தான் ஜெர்மானியர் உபயோகித்தனராம். ஆகவே காலதாமதமாம்.

இப்படி விபரீதப் பிரசாரத்தை யாராவது நம்புவார்களா? ஜெர்மனியில் நம்பினார்கள். சண்டையில் சைனியம் வேகமாகப் பாய்ந்து சுலபமாக வெற்றியடையும் என்று எதிர்பார்ப்பதற்குப் பதிலாக, ராணுவத்தின் அராசகத்திற்குப் பயந்த ஜெர்மானியர் தங்கள் பொருள்கள் யாவற்றையும் கொடுக்கத் தயாராக இருக்கின்றனர். மேலும் அமெரிக்காவுடன் சண்டை செய்யவும் எந்த நேரத்திலும், நடுநிலைவகிப்பவர்கள் மேல் புதிதாகப் படையெடுக்கவும், ஜனங்கள் தயாராக இருக்கிறார்களென்று பொய் பிரசாரம் செய்து சண்டையை மேலும் நடத்துகிறார்கள். ஆனால் வெளிப்படையாக குளிர் காலத்திற்குள் சமாதனம் ஏற்படும் என்றும் சொல்லுகிறார்கள்!

உண்மையென்னவென்றால், யுத்தம் ஆரம்பித்தமுதல் ஒவ்வொரு ஜெர்மானிய ஸ்திரீ புருஷனுக்கும் சமீபத்திருக்கும் சமாதானம் மிகவும் விரும்பத்தக்க லக்ஷியமாக இருக்கிறது. ஜனங்களுக்கு ஒரு பக்கம் வெறுப்பும் மற்றொரு பக்கம் நம்பிக்கையும் விபரீதமாகச் சேர்ந்து இருக்கிறது. போலந்து, கிரீஸ், கிரீட், முதலிய இடங்களில் அடைந்த வெற்றிகள்கூட கொஞ்சமும் உண்மையான உத்ஸாகத்தை அளிக்கவில்லை. மற்றநாடுகளைக் கொள்ளையடிக்கவும் அதனால் உண்டாகும் கௌரவத்தையும் விரும்பாமல் மாரி காலத்திற்குள் சமாதானம் வந்தால் போதுமென்று நோக்குகிறார்கள். ஏனென்றால், ஆரம்ப காலங்களில் வெற்றிபெற்றாலும் சொல்லப்பட்டதற்கு அதிகமாக ஜெர்மனி நஷ்டம் அடையும் என்று அறிந்துகொண்டிருக்கலாம். ஆகையால் சண்டையை முடிக்கவே மனப்பூர்வமாக நினைக்கிறார்கள். ஆனால் ருஷ்யப்போரில் தோல்வி ஏற்படும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லைபோலிருகிக்றது. அதை எதிர்பார்த்திருந்தால் சண்டை அடுத்த வருஷத்திலும் நீடித்து தொடரும் என்று அறிவார்கள். அது தோன்றாது செய்தது பொய்பிரசாரத்தின் பயன்தான்!

இவ்விதமாக இனி மீளமுடியாது என்ற பயங்கரத் தோற்றத்தை ஜெர்மானிய ஜனங்கள் மாத்திரம் அறியவில்லை என்பதுஅல்ல, ஜெர்மன் அரசாங்கமே மாரி காலத்திற்குள் சாமாதானத்திற்குவேண்டிய ஏற்பாட்டை செய்கிறதாகத் தெரிய வருகிறது. ஜெர்மன் ராணுவ அதிகாரிகள் ருஷ்ய யுத்தத்திற்கு 6 வாரம் முடிவு கட்டியிருந்தனர். அதை 3-மாதங்களுக்கு விருத்திசெய்தும், மாஸ்கோ பிடிபட்டால் ருஷ்யா முழுதும் தங்கள் வசமாகுமென்றும் ஸோவியத் அரசாக்ஷி போய்விடும் என்றும் நினைக்கிறார்கள். ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்து, பத்திரிகைகளின் பெர்லின் நிருபர்கள், இனிமேல் ருஷ்யாவில் செய்யவேண்டிய அரசாங்க திட்டம் ஜெர்மனியில் போடப்பட்டிருப்பதாகக் கூறுகின்றனர். ஜெர்மன் ஸர்க்கார் கடிதங்களில் ருஷ்யாவின் பெயரைமாற்றி ஜெர்மனியின் 'கிழக்கு மாகாணம்' என்று புதுப்பெயரைச் சொல்லுகிறார்களாம்!

உண்மையில், ஜெர்மானியரின் மனது மாரி காலத்திற்குள் பூர்ணவெற்றி அடையுமென்ற ஆத்ம நம்பிக்கை கொண்டிருக்கிறது. அதனால்தான் சமாதானத்தையும் எதிர் பார்க்கிறது. ஆனால் நேசதேசத்தவரான நாம் ஹிட்லர் திட்டப்படி மாரிகாலத்திற்குள் சமாதானம் ஏற்படாமல் தடுத்துவிடுவோம். அப்பொழுதுதான்

ஜெர்மனியில் சண்டையில் வெறுப்பினால், யுத்தம் போதுமென்ற எண்ணம் உண்டாகி ரகசியப் போலீஸினாலும் கண்டுபிடிக்க முடியாதபடி மாறுதலடையும்!

வி வி வி வி வி

**வலுவான தற்காப்பு.** ருஷ்ய ராணுவ அதிகாரிகள், ஜெர்மன் மின்னல் படையை எதிர்க்கப் போதுமான தற்காப்பு செய்திருக்கிறார்களோ இல்லையோ, தற்சமயம் கையாண்டுவரும், "ரப்பர் போல் வளையக்கூடியகட்டு, வலை" போன்ற முறை ராணுவ சாஸ்திரத்தின்படி அதிக சக்திவாய்ந்ததுதான். ஸினிமாப்படம் காண்பித்தால்தான் ருஷ்ய சைனிய நிலைமை சரியாகத் தெரியவரும். பால்டிக் கடலுக்கும் கருங்கடலுக்கும் நடுவில் ஒரு பெரும் சர்ப்பம்போல் வளைந்து காணப்படும். இவ்விதமான வில்போன்ற நூதன சைனிய அணிவகுப்பு உலகத்தாருக்கு வியப்பை அளித்திருக்கிறது. ஜெர்மனியிலோ சேனைத் தலைவர்களுக்கும் பிரசாரகர்களுக்கும் திகிலைச் செய்திருக்கிறது.

இருந்தாலும் ஜெர்மானியர் கைஓங்கி இருக்கிறது. ருஷ்யர்கள் யூக்ரேனின் தென்பாகத்தில் சற்று பின்வாங்கி யிருக்கின்றனர். ஆனாலும் அவர்கள் சைனியம் முறியடவில்லை. ஜெர்மானியர் சண்டைக்கென்று முன்ஜாக்கிரதையாக ஏராளமான தயாரிப்பு செய்திருந்தால் இந்நிலைமை இன்னும் கொஞ்சநாள் இருக்கத்தான் இருக்கும். ஆனால் ஜெர்மானியர் அபிப்பிராயப்படி அவர்கள் திருப்தி அடையக் கூடிய ஒருவித லாபமும் அடையவில்லை. ஏனென்றால் சண்டை ஆரம்பித்து 7 வாரங்கள் ஆகியும் முதல்தரமான பிரதேசமோ, ராஜீய முக்கியத்வம் வாய்ந்த இடமோ அவர்களுக்குக் கிட்டவில்லை.

வி வி வி வி வி

**ஒடெஸ்ஸா.** ஜெர்மன் குறிப்பிலிருந்து, லெனின்கிராட், மாஸ்கோ, கீவ் முதலிய இடங்கள் எடுக்கப்பட்டு, ஒடெஸ்ஸாவைக் கைப்பற்றுவதில் மும்மரமான வெற்றியடையப் போவதாக ஜெர்மன் பொதுமக்கள் ஆசை காட்டப்படுகின்றனர். ஆனால் அவ்வளவு சீக்கிரத்தில் பிடிக்க முடியாதபோனாலும், முக்கியமான ருஷ்யத் துறைமுகமான ஒடெஸ்ஸாவிலிருந்து போக்குவரவு சாதனங்களைத் தடைசெய்ய ஜெர்மன் சைனியம் முழுபலத்துடன் பெரும் முயற்சிகளைச் செய்கின்றன.

ஒடெஸ்ஸா எதிரி வசமாவதில் 2 விஷயங்களைக் கவனிக்கவேண்டும். முதலாவதைப்பற்றி சென்ற வாரம் நாம் குறிப்பிட்டிருக்கிறோம். அதாவது யூக்ரேனில் ஏற்கனவேயே ஜெர்மன் எண்ணங்கள் மங்கிப்போயின. இவர்கள் கைப்பற்ற வேண்டுமெனத் தீர்மானித்திருந்த வெள்ளாமை விளைச்சல்களை ருஷ்யர்கள் கிழக்கே அப்புறப்படுத்திவிட்டனர். இரண்டாவதாக, ஒடெஸ்ஸா போனதால் யூக்ரேன், பூராவும் விரோதி வசமாகாது. ஏனென்றால் நீபர் என்ற நதி அப்பிரதேசத்தை இரண்டாகப் பிரித்து எதிரிக்கு இயற்கைத் தடையாக இருக்கிறது.

இவைகளைத் தவிர மூன்றாவதாக விரோதிக்குக் கஷ்டம் விளைவிக்கக்கூடியது மற்றொன்றிருக்கிறது. யூக்ரேனில் உள்ள ஜனங்கள் ருஷ்ய கவர்ன்மெண்டிற்கு விரோதமாக இருப்பார்களென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அனுபவத்தில் ஒரு துரோகிகூட தென்படவில்லை.

வி வி வி வி வி

**ஜப்பான்.** இதுவரை, பிரிடன், அமெரிக்க அரசாங்கங்களிலிருந்து அதிகார பூர்வகமாக பேச்சு வார்த்தை ஒன்றும் அனுப்பப்படாமல் இருப்பதாலும், பொருளாதார விஷயமாக இந்த இருநாடுகளும் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் தாத்பரியத்தை ஜப்பானுடைய ஆக்கிரமணச் செய்கையைத் தடுத்ததாகத்தான் உணரவேண்டும். இந்த நடவடிக்கைகள் இந்தோ-சைனாவுக்குள் ஜப்பான் பிரவேசித்த பொழுது எடுக்கப்பட்டன. 15 தினங்களாகத் தாய்லாந்தைக் குறித்து சில பத்திரிகை புகழ்ச்சிகளைத் தவிர ஒன்றும் தெரியவே இல்லை. ஆனால் மஞ்சுகோவிலும், வடக்குக் கொரியாவிலும் சைனியத்தைப் பலப்படுத்துவதையும், சைனாவை எதிர்ப்பதைப் பற்றியும் அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது.

நிச்சயமாக தாய்லாந்திற்கு ஆபத்து சமீபத்தில் தானிருக்கிறது. அதன் சைனியம் மிகவும் சிறியது, 50,000 பேர்தான் கொண்டது. ராணுவ சம்பாரங்களும் அதிகம் இல்லை. மேலும் 50,000 பேர் கொண்ட ஜப்பானியப்படை கமிரான்குடா, ஸைகோன் முதலிய இடங்களில் இறங்கிவிட்டது. தாய்லாந்திற்குச் சொந்தமான 8 விமான நிலயங்களையும் கைப்பற்றிவிட்டது. அவைகளில் பாங்காக்குக்கு 250-மைல் தூரத்தில்தான் ஸாக்ட்ராங்க் என்ற தாய்லாந்தின் விமான நிலயம் உள்ளது. வடகிழக்கு நோக்கி ஜப்பான் செல்லுவதெல்லாம் ஜப்பானிய அரசாங்கத்தார் சொல்லும் விதமாக பாசாங்கானால், தாய்லாந்து மாத்திரமன்னியில் சிங்கப்பூருக்கும், டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் ஆபத்து வரும்; அப்பொழுது அவர்கள் சேமித்து வைத்திருக்கும் சைனியங்கள் வீணாகாது.

தாய்லாந்திலுள்ளோர் போர் புரிவார்களென்று, நாம் கேள்விப்பட்டபடி, செய்தால் நேசதேசங்களும் பூர்ண உதவியைக்கொடுப்பார்கள். சென்ற ஒரு வருஷ காலமாக சிங்கப்பூரிலும், பர்மாவிலும் பலப்படுத்தியதிலிருந்து நேச தேசத்தார்கள் சொல்லுவது வெறும் வார்த்தையாகாது. அதிகார முறையில் கணக்கு எடுத்தபடி சிங்கப்பூரிலுள்ள விமானப்படை நிச்சயமாகப் பெரியது, இதற்கு எதிராக ஜப்பானியர் கொண்டுவருவது மிகவும் சிரமம். அதே மாதிரி சைனியமும் சாம்ராஜ்ஜியத்தின் இருபக்கங்களிலிருந்து வந்து சில மாதங்களாகக் குவிகின்றன. பர்மாவும் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. டச்சு அரசாங்கத்தாரின் தயாள குணமும், தைரியமும் 'பொது க்ஷேமத்திற்குஎன்று பாசாங்கு செய்யும் ஜப்பானின் ஆக்கிரமத்தைத் தடுப்பதற்கு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறதைத் தெரிவிக்கின்றன.

ஒரு கழுதை சுமக்கும் பாரமுள்ள தங்கத்தினுல் எந்தப்பெரிய பட்டிணத்தையும் லஞ்சம் கொடுத்து பிடித்துவிடலாமென்று ஒரு பழைய ரோம வீரன் சொன்னதாக ஞாபகம். அவன் நவீன நாஸியை அனுசரித்தவனுக இருக்க வேண்டும். ஏனென்ருல் ரோம வீரனும், நவீன நாஸியும் ஜனங்களின் பொருள் மதிப்புள்ள லஞ்சம், ராஜீய விஷயத்தில் பெருந் தந்திரக் கருவியாகக் கருதுகின்றனர். இவ்விதமாக நாஸி ஏமாற்றலுக்குட்பட்டு ஒவ்வொருவனும் 'புதுத் திட்ட' சம்பந்தமாக அனுதாபம் காட்டுவதாயும், ஆச்சரியப்படுவதாயும் ஜெர்மன் பிரசாரகர்கள் சொல்லுவதெல்லாம் லஞ்சம் பெற்றவர்கள் முறையாகத்தான் இருக்கிறது.

உதாரணமாக, சீர்கெட்ட ரஷீத் ஆலியை எடுத்துக்கொள்ளுவோம் ஜூலை மாதம் 4-ம் தேதி பாக்தாத் நகரத்தில் வெளியான ஒவ்வொரு பத்திரிகையும் அவனுடையவும், அவன் கூட்டத்தாரின் கெட்ட நோக்கங்களைப் பிரசுரித்தன. அவனுக்கு பதிலி ராஜ்ஜிய நிர்வாகி 7 வாரங்களுக்குள் பொக்கிஷத்திலிருந்து தனக்குச் சேரவேண்டியதற்கு அதிகமாக 80,000 ரூபாய்கள் பெற்றுக் கொண்டான். ரஷீத் ஆலியும் வரவேண்டியதைவிட 10 மடங்கு அதிகமாகவே எடுத்துக்கொண்டான். ஜயாம் காஸிம் மாக்ஸத் என்பவன் செலவழித்ததற்குக் கணக்குக் கொடுக்காமலே $1\frac{1}{2}$ லக்ஷ ரூபாய் செலவழித்தான். அராபிய சர்வாதிகாரியும் அவனது நண்பனுன யூனஸ் ஆல்ஸாபி தலைகால் தெரியாமல் ஓடும் பொழுது போலீஸ் வசம் 16 லக்ஷ ரூபாய்கள் வந்தது.

இவ்வித்மான உண்மை நடப்புகள் இராக்கின் முந்தின அரசனைக் குறித்து இராக்கிலுள்ளவர்களின் தப்பு அபிப்பிராயத்தை மாற்றிவிடும். மேலும், இப்பொழுது எல்லாம் ஒழுங்காக இருக்கிறதென்று அவர்கள் நினைப்பதும் சரிதான். (ஜெர்மானியர் மாத்திரம் இப்பொழுது அபாண்டமாக தூஷணைக் கதைகளைக் கட்டுகிருர்கள்). ராஜவிச்வாஸமுள்ள ஜமீல் மட்பை இப்பொழுது ராஜ்ஜியத்தில் முழு அதிகாரம் பெற்றிருக்கிருன். சரியான பிரதிநிதி அமைக்கப்பட்டவுடன், மீர் அப்துல் இல்லாவின் ராஜீயச் செய்கைள் 1930-ம் வருஷத்திய உடன்படிக்கைபடி கட்டுப்பட்டிருக்கின்றன.

இதற்கிடையில், பிரிடிஷ் தூண்டுதலின் பேரில் அங்கே 'சமாதானக் குறைவும், பொதுமக்களைக் கொலைசெய்வதுமாக' இருக்கின்றன என்று ஜெர்மானியர் கட்டிவிடுகிருர்கள். இது அங்கே பாக்தாத் பொதுச் சட்டப்படி மகமத் இபன் ஆயுப், இப்ரஹிம் இபன் ஜஸிம், ஸலா ஓமார் அல் நஜ்ஜர் என்றவர்களைத் தூக்கிட்டதைக் குறிக்கலாம். ரஷீத் ஆலி, இரானுக்கு ஓடுவதற்கு முன்னுல் பாக்தாத் போலீஸைத் திருப்பி அழைத்து விட்டதால் இவர்கள் கண்டபடி துணிச்சல் கொண்டனர். அதனுல் இவர்கள் சிக்ஷிக்கப்பட்டனர். மேலும் இவர்களை ராணுவ நியாய சபையில் தண்டிக்கவில்லை.

வி வி வி வி வி

சமயத்திற்கேற்றவாறு ஜெர்மானியர் செய்யும் சமாதான ஆக்கிரமணத்தைப் பற்றி, இரானுக்கு சென்ற பத்திரிகையில் எச்சரித்திருக்கிருேம். பெர்லினில்

1939-ம் வருஷம் மார்ச்சு மாதம் 9-ம் தேதி தென் அமெரிக்காவில் ஜெர்மனியின் நோக்கத்தைப்பற்றி ஜெனரல் வாபல் என்பவர் செய்த பிரசங்கத்தில் பின்வருமாறு இருக்கிறது. "தென் அமெரிக்காவில் ஜெர்மானியப் படிப்பாளர்களேயும், விஞ்ஞான சாஸ்திரிகளேயும், பாஷாப்பிரவீணர்களேயும் (முக்கியஸ்தர்களாகப்) புகுத்தி அமெரிக்கப் பிரசாரத்தை தடுக்கவேண்டும். ரேடியோ, பத்திரிகை, ஸினிமா முதலியனவும் உபயோகிக்கப்படவேண்டும்".

இவ்விதமாக அமெரிக்க நாடுகளுக்குள் பிளவை ஏற்படுத்துவது ஜெர்மன் ஆதிக்கத்தை தென் அமெரிக்காவில் ஸ்தாபிக்க பூர்வாங்கமாக ஆகும்.

சமீபத்திலும் ஜெர்மானியர் வாயால் சொல்லுவதைக் காரியத்தில் செய்து காண்பிக்கிறார்கள் என்பதற்கு பல திருஷ்டாந்தங்கள் இருக்கின்றன. ஆனால் இவையாவும் முடிவில் ஹிட்லருக்கு மனத்தாங்கலாகத்தானிருக்கும்.

1. அர்ஜென்டைனவிலுள்ள அரசாங்கத்தார், போலீஸ்காரர்கள் கைப்பற்றிய சில யாதாஸ்துகளிலிருந்து, பெரு—ஈக்விடார் சண்டை, நாஸி ஏஜெண்டுகளால் நேர்ந்திருக்கலாமென்கிறார்கள்.

2. பொலீவியப் போலீஸ்காரர்கள் ஆகஸ்டு 1-ம் தேதி கலகத்திற்குச் சித்தமான சில திட்டங்களேக்கண்டு பிடித்தனர். ஜெர்மன் மந்திரியான ஹெர் வெண்ட்லர் உடனே வெளியேற்றப்பட்டார்.

3. ஆண்டர் ரியோஸ் என்ற மகாணத்தில் நாஸிச் சூழ்ச்சியைக்கண்டு அர்ஜென்டைன மந்திரி சபை கோபம் கொண்டது. பரஸ்பர ராஜீய சம்பந்தத்தை ஜெர்மனியுடன் ரத்துசெய்துவிடப்போவதாகச் சொன்னதும் ஜெர்மானிய ஸ்தானதிபதி அச்சுநாட்டுப் பிரசாரம் செய்யவில்லை என்று ஒப்புக்கொண்டார்.

4. ஆகஸ்டு 7-ல் உருகுவே கவர்ன்மெண்டு, 6 அச்சு நாட்டுக் கப்பல்களே அமெரிக்காவில் சமாதான நிலையைக் காப்பாற்ற நடுநிலை நாடுகளுக்கு வாடகைக்கு கொடுத்தது. (யுனைடெட் ஸ்டேட்ஸுக்குத்தான் கொடுத்தது). ஒரு வருஷத்திற்குமுன், குடியரசு நாடுகளில் ராணுவக் குடியேற்றம் செய்ய நாஸிகளால் தயாரிக்கப்பட்ட உபாயத்தையும் வெளிப்படுத்தினர்.

5. பெரு ஸர்க்காரும் ஜெர்மனியுடன் 1925-ல் செய்துகொண்ட ஏற்பாட்டை ரத்துசெய்துவிட்டனர். அதன்படி அரசியல் கடிதங்களே ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளும் சம்பிரதாயத்தை விட்டுவிட்டார்கள். ஜெர்மானியர் இந்த சௌகரியத்தை துர்வினியோகம் செய்தார்கள்.

6. மெக்ஸிகோ அதிகாரி ஒருவர் அங்கிருக்கும் ஜெர்மன் மந்திரியை, மெக்ஸிகோவில் ஐந்தாம்படைக்கு முக்கியமானத் தலைவனென்று குற்றம் சாட்டி, ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

7. சைலீஷியாவில் உள்ள போலீஸ் அதிகாரிகள் நாஸிச்செய்கைகளே விடாமல் கவனித்து வருகிறார்கள். ஜெர்மானியரை உள்ளே வரவிடாமல் பார்த்துக்கொள்ளும்படி பத்திரிகைகளும் எச்சரிக்கைச் செய்து வருகின்றன.

இவ்விதமாக தென் அமெரிக்கா பூராவும் நாஸிக் கக்ஷியை அழிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதினால் நாஸிப் புரட்சிகள் புகைந்து போயின. இதற்கு அறிகுறியாக, மார்ச்சு 21-ம் தேதி ஸாந்தியாகோவில் ஜெர்மன் உள்நாட்டு உத்தியோகஸ்தர்கள் ஒன்று கூடி ஆலோசித்தனர். மேலும் பிரிடிஷ்காரர்கள் கடைசியில் வெற்றியடைவார்கள் என்ற நம்பிக்கையால் ஒருவரும் நாஸிகளின் பிரதிகாரங்களைக்கண்டு பயப்படவில்லை.

---

# "அமெரிக்கா பிரிடனுக்கு அனுப்பிய செய்தி."

## "நீங்கள் தனிமையாகப் போராடவில்லை"

## "பிரஸிடெண்டு ரூஸ்வெல்டு மிஸ்டர் சர்ச்சிலின் கோரிக்கைக்கு இணங்கியிருக்கிறார்."

## சீனாவுக்கும், ருஷ்யாவுக்கும் யுனைடெட் ஸ்டேட்ஸ் செய்யும் உதவி.

[ஹாரி ஹாப்கின்ஸ் லண்டனிலிருந்து பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தின் ஜனங்களுக்கு சமீபத்தில் ஒலிபரப்பு மூலம் பேசியது.]

யுனைடெட் ஸ்டேட்ஸ் ஜனங்கள் சார்பாக அமெரிக்கா செய்யும் உதவி, வாய்பேச்சு மட்டுமில்லை என்று பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட் சொன்னார். இப்பொழுதும் அமெரிக்கா கொடிகட்டி பறக்கும், பளபளப்பான பழுப்பு நிறமுள்ள அமெரிக்கக் கப்பல்களும், நாசகாரிகளும் வட அட்லாண்டிக்கில் போய்க் கொண்டிருக்கின்றன.

ஒரு காலத்தில் இந்தப் பெரிய சமுத்திரம் அமெரிக்காவையும், பிரிடனையும் பிரித்துவைத்திருந்தது. இப்பொழுது அது இரண்டையும் சேர்க்கிறது. இன்றுகூட பிரிடிஷ் யுத்தக் கப்பல்களும், அமெரிக்கா யுத்தக் கப்பல்களும் உலகத்தில் உயிர் நிலையைப் பாதுகாக்கவேண்டிய ஒரே நோக்கத்துடன் எதிர் எதிரே பாராக்கொடுத்து வருகின்றனர்.

லண்டனின் கீழ் கோடியில் தொழிலாளிகள் வீடுகளில் வெடிகுண்டு போட்ட சமாசாரம் பிரஸிடெண்டு ரூஸ்வெல்டுக்குத் தெரியப்படுத்திக் கொண்டிருக்கும்பொழுதும் கவன்டிரி, பிளிமத் என்ற இடங்களில் வெடிகுண்டுகள் போட்டது, அவருக்குத் தெரிந்தபொழுதும், நான் அவருடன் இருந்தேன்.

அப்பொழுது பச்சாதாபத்தோடு அவர் சில வார்த்தைகள் சொன்னார். அவருக்கு ஹிட்லரைத் தொலைக்கவேண்டுமென்ற தீர்மானம் ஏற்பட்டிருப்பதைத் தெரிந்துகொண்டேன். பெர்லினிலுள்ள பாபிஷ்டனை, வெறிபிடித்த ஹிட்லரின் பலத்தைத் தவிர்க்கவேண்டுமென்று உங்கள் பிரதம மந்திரிக்குள்ள அபிப்பிராயம் போல் அவருக்கும் இருக்கிறது.

பிரஸிடெண்டு உத்தரவின்பேரில்தான் நான் இங்கு வந்திருக்கிறேன். அவர் எனக்கு இட்ட கட்டளையாவது: "நாம் அனுப்பும் சாமான்கள் பிரிடனுக்கு எல்லாம் போய் சேருகிறதா என்றும், பிரிடனுக்கு இதுதான் தேவையா என்றும் பார். இதைவிட வேறு பிரிட்டனுக்கு ஏதவாது தேவையா என்பதை எனக்குத் தெரியப்படுத்து.

இதுதான் என் காரியம். அவர் என்னைப்பார்க்கும்படி சொன்ன காரியங்களை நான் தெரிந்துகொண்டேன். முக்கியமான சில சாமான்கள் சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்டாலும், அமெரிக்கா இந்தத் தீவுக்கு கப்பல் மார்க்கமாய் அனுப்பிய யுத்த சாமான்களில் பெரும்பாகம் இங்குவந்து சேர்ந்திருக்கிறது.

உங்கள் சபை மந்திரிகளிடமிருந்து என்ன இங்கிலாந்துக்குத் தேவையென்று தெரிந்துகொண்டேன். அமெரிக்காவுக்குப் போய் இதுவிஷயத்தைப் பிரஸிடெண்டுக்குத் தெரிவிக்கிறேன். ஜன நாயகத்திற்காக நீங்கள் செய்யும் சண்டைக்கு சில சாமான்கள் தேவையென்று கண்டுபிடித்தேன். அமெரிக்கா அவைகளை உங்களுக்கு அனுப்பக்கூடும் என்பது எனக்கு நம்பிக்கை உண்டு.

நாங்கள் அமெரிக்காவில் 3,000 மைலுக்கு அப்பால் இருந்தாலும் இப்பொழுது, அட்லாண்டிக் மஹா சமுத்திரம் ஒரு சிறு கால்வாய் போல் இருக்கிறது. நமக்குள் ஏற்பட்ட சிநேகிதம், அதற்கு ஒரு பாலமாக இருக்கிறது. அனுதாபமும், மதிப்பும், என்பவைகளை அடிப்படையாகக்கொண்டு அந்தப் பாலம் வாஷிங்டனிலிருந்து கட்டப்பட்டிருக்கிறது. இந்தப் பாலம் கண்ணுக்குப் புலப்படாமலிருந்தாலும் நாஸியின் கொடுமை இதை அழிக்க முடியாத அவ்வளவு பலமாகயிருக்கிறது.

உங்கள் பிரதம, மந்திரியும், எங்கள் பிரஸிடெண்டும் 3,000 மைலுக்கு அப்பால் இருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது, நமக்குள்ள தூரத்தை மைல் கணக்கில் அளப்பதில்லை. ஹெர் ஹிட்லர் டோவரிலிருந்து 21-மைலில்தான் இருக்கிறார். ஆனால் அவரும் அவருடைய காட்டுமிராண்டி வாழ்க்கையும் பிரிடனில் 2,000 வருஷத்திற்கு முன் இருந்த மாதிரி இருக்கிறது.

நான் என்னுடைய தேச நன்மையை உத்தேசித்தும் நமது ஜனநாயக ஆட்சி அழியாமல் இருப்பதில் அக்கரைகொண்டு சொல்லுகிறேன். நமது பிழைப்பும், நமது தேசமும், ஹிட்லரால் மிரட்டப்படுகிறதென்று, அநேக அமெரிக்கர்கள் எண்ணுவதைப்போல் எனக்கும் உணர்ச்சி ஏற்படுகிறது. நீங்கள் சண்டையிடுவது உலகத்தாருக்கு ஸ்வதந்திரம் ஏற்படுவதற்காகவென்பது நானும் அபிப்பிராயப்படுகிறேன். உங்கள் சண்டை தோற்காது; தோற்கவும்கூடாது.

குத்தகைக் கடன் மசோதா என்று வழங்கிவரும் மசோதாவைக் குறித்து நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். சில காலம் எங்கள் தேசத்திலிருந்து சந்தோஷமும், நம்பிக்கையும் உண்டாக்கக்கூடிய சமாசாரம் அனுப்பப்பட்டிருந்தது. அமெரிக்காவிலிருந்து பிரிடிஷ் துறைமுகங்களுக்கு இறக்கமும், நேசப்பான்மையும் காட்டி சாமான்கள் அனுப்பிய கப்பல்கள் வந்தன. அப்பொழுது

கால் பந்தாட்டத்தைப் பக்கத்தில் நின்று விளையாடுபர்களை உத்ஸாகப்படுத்துகிறவர்கள் போல் எங்கள் தேசம் இருந்தது. அது போதாததுதான். யுனைடெட் ஸ்டேட்ஸ் பிரஸிடெண்டு அதை அறிந்து கொண்டார். பச்சாதாபத்தை, வார்த்தைகளால் காண்பிப்பதைவிட ஒரு விமானம் அனுப்பிப்பது நலம். வெரும் புகழ்ச்சியைக் காட்டிலும் நாசகாரிகளை அனுப்புவது விசேஷமென்று அமெரிக்கா கருதிற்று. பிரஸிடெண்டும் அவர் சபை மெம்பர்களும் அவர்கள் செய்யும் பிரசங்கத்திற்காக பிரிடனில் புகழப்பட்டாலும், யந்திரங்கள் ஆயுதங்கள், பீரங்கிகள் யுத்தப் பொருள்கள் அமெரிக்காவில் செய்து இங்கு கொண்டுவந்து கொடுக்கப்பட்டால், வெரும் வார்த்தைகளைக்காட்டிலும் பலிதமாகவேயிருக்கும், என்று அவர் கருதினார்.

இதற்காகத்தான் குத்தகைக் கடன் மசோதா ஏற்படுத்தப்பட்டது. எங்களுடைய அனுதாபமும் மதிப்பும் இதன் மூலம் வெளிப்படையாகக் காட்டப்பட்டது. கொடுங்கோல் செய்பவர்களையும், ஜனநாயகத்தை அடிமையாக்கப் பிரயத்தனப்படும் மனிதனையும் தாக்க இந்த மசோதா ஒரு ஆயுதம்.

இது வரையில் அமெரிக்கா செய்து வந்த உதவியின் பூரா விவரங்கள் பிரிடிஷ் மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. எவ்வளவு சாமான்கள் அனுப்பப்பட்டிருக்கிறதென்ற விவரம் பிரசித்தப்படுத்தினால் எதிரிக்கு வேண்டிய முக்கியமான ரகசியங்கள் வெளிப்படும். கனடாவுக்கும், அமெரிக்காவுக்கும் பிரிடனுக்கும் இடையேயுள்ள உயிர் நிலையான போக்குவரவு சாதனத்திற்குக் கெடுதி நேரிடலாம்.

ஆனால் இப்பொழுது கடல் பாதைகள் அதிக பலமாய் கார்க்கப்படுகின்றன, அனுதாபத்தையும், நம்பிக்கையும் காட்டிலும் மிகப் பயனுள்ள சாமான்களை ஏற்றிக்கொண்டு தினந்தோறும் ஓயாது அலைமாதிரி வரும் கப்பல்களில் வந்து கொண்டிருக்கின்றன. இவைகளை எதிரியால் தடுக்க முடியாது.

கடல் மார்க்கமாக வந்திருக்கும் யுத்த தளவாடங்களைக் குறித்து சுருக்கமாகக் கூறுகிறேன். சென்ற அநேக மாதங்களாக அமெரிக்கா உற்பத்தி சாலைகளில் செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான விமானங்கள் பறந்தும், கப்பல் மூலமாகவும் இங்கு வந்திருக்கின்றன. அவை பெரிய வெடிகுண்டு விமானத்திலிருந்துவேகமாகச் சண்டையிடும் விமானங்கள் வரையிலும் அடங்கியிருக்கின்றன. அவை இப்போது சண்டையில் கலந்துகொண்டிருக்கின்றன.

சென்ற வாரத்தில் ஜெர்மனியைப் படையெடுத்து நாலு இஞ்சின் உள்ள 'போயிங்' என்ற 'பாம்பர்' விமானங்கள் திரும்பி வந்ததைக் கண்டேன். இம்மாதிரி ஆயிரக்கணக்காக உற்பத்தி செய்ய திட்டம் போடப்பட்டிருக்கிறது. அவைகளால் அழிக்கவிடாமல் ஹிட்லர் தன் உற்பத்தி சாலைகளை கிழக்கே நகற்றவே முடியாது.

ஏற்கனவே அமெரிக்கா அநேக நூற்றுக்கணக்கான டாங்கிகள் பிரிடிஷ் சாம்ராஜ்ஜியம் பூராவும் அனுப்பப்பட்டிருக்கின்றன. இன்னும் அநேகம் வந்து கொண்டிருக்கின்றன.

சமுத்திரத்தில் செல்லும் கப்பல்களும், எண்ணெய் கப்பல்களும் பிரிட்டனுக்கு அமெரிக்காவால் அனுப்பப்பட்டிருக்கின்றன. இதுவரையிலுமில்லாத பெரிய வியாபாரக் கப்பல்கள் செய்ய ஏற்பாடாகியிருக்கிறது. இரவும் பகலும் ஓயாமல் கப்பல்கள் கட்டப்படுகின்றன. ஆகாரம், எண்ணெய், யுத்தப் பொருள்கள் இவைகளை ஏற்றிச்செல்ல போதுமான கப்பல்கள் அனுப்பப்படுமென்று நாம் உறுதி சொல்லுகிறோம். இன்று அமெரிக்க டாங்கிகள் மத்திய கிழக்குப் பிரதேசத்தில் உள்ள பாலைவனப் பொட்டல்களில் கம்பளிப்பூச்சிபோல் சாரி சாரியாய் நெளிகின்றன. ஜெர்மன் விமானப்படை தலைகாட்டுமிடங்களிலெல்லாம் எல்லாவிதமான அமெரிக்க விமானங்கள் எதிர்க்கக் குமுறிக்கொண்டு நிற்கின்றன. இங்கிலாந்தில் எல்லாத் தொழிற்சாலைகளெல்லாம் பூரணமாகச் சாமான்களைச் செய்கின்றன. பிரிடிஷ் யந்திர ஆயுதங்கள் ஓயாமல் வேலை செய்கின்றன. அப்பேற்பட்ட ஆயுதங்களில் ஒரு பகுதி அமெரிக்காவில் செய்யப்பட்டவை.

இப்படிச் செய்ததும் போதாதது என்று எங்களுக்குத் தெரியும். இப்பெரும் சண்டையில் நாங்கள் சிறியபாகம்தான் கலந்திருக்கிறோம். சரீரப் பிரயாசைப் பட்டும், இரத்தம், வியர்வை, கண்ணீர் சிந்தும்படியாக நீங்கள் பாடுபட்டிருக்கிறீர்கள் என்பதை உணர்கிறோம்.

இப்படி நாங்கள் மெதுவாக இருப்பதாகத் தோன்றுவதற்கு ஒரு காரணம் உண்டு. சமாதான காலத்தில் தேவையான சாமான்களைச் செய்துவந்த தொழிற்சாலைகளை டாங்கிலும், விமானங்களும், பீரங்கிகளும், செய்ய திடீரென்று ஒரே நாளில் மாற்றியமைப்பதென்றால் சாத்தியமில்லை. புதிய யந்திர சாமான்கள் செய்ய வேண்டியதாகவும், சில சமயங்களில் நவீன உபயோகத்திற்கு (புது பிரச்னைகளுக்கு)த் தக்கவாறு கண்டுபிடிக்க வேண்டியதாயும் இருந்தது. இதனால் தான் அவகாசம் வேண்டியிருந்தது.

மேலும் மற்றொரு மாறுதல் தேவையாயிருந்தது. சமாதான காலங்களின் தொழிற்சாலை அமைப்பை மாற்றியதுபோல் தொழிலாளிகளின் பான்மையையும், மாற்றவேண்டிவந்தது. ஏனென்றால் வியாபாரத்துக்காக உபயோகிக்க சாவகாசமாகத் தயார் செய்த மனப்பான்மையை, வேறுவிதமாக மாற்றவேண்டியிருந்தது. இவ்விதமாக தேவை ஏற்பட்டிருக்கிறதென்று இப்பால் உணரப்பட்டிருக்கிறது.

இது மோட்டார்களும், மின்சார ஐஸ் பெட்டிகளும்செய்து, முதல் போட்டவர்களுக்கு லாபம் காட்டும் சமயம்அல்ல; இது யுத்த சமயம்; லாபத்திற்கிடமில்லை. 'டெட்டிராயிட்', 'லாஸ் ஏஞ்சல்ஸ்' என்ற இடங்களிலுள்ள தொழிற்சாலைகளிலும், பிட்ஸ்பர்க் என்ற இடத்திலுள்ள எஃகு யந்திர சாலைகளும், பெனிஸல்வேனியாவிலுள்ள சுரங்களிலும் செய்யக்கூடிய சாமான்களைக் கொண்டு யுத்தத்தை வெற்றிகரமாய்முடிக்கலாம் என்று தெரிந்துசொல்ல வெகுகாலம் பிடித்தது. இதற்காக நாங்கள் எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொண்டு வருகிறோம். அதைப் பொது மக்களும் அறிந்துகொள்வார்கள். வர்த்தகத்

தகரார்களை மறந்து விடுமுறைநாட்களையும் குறைத்துக்கொண்டு பொதுவெற்றிக்காக, பீவர்புருக், பெபின் என்பவர்களுக்காக பிரிடிஷ் மக்களுடன் அமெரிக்கத் தொழிலாளர்கள் ஒத்துழைக்கிறுர்கள்.

அடுத்த பனிரெண்டு மாதங்களுக்குள் ஏராளமான விமானங்களும், டாங்கிகளும், பீரங்கிகளும் அதற்குத் தேவையான வெடி மருந்துகளும் இத்தீவிற்கு வந்து இறங்கும். இப்படி இவ்விரு தேசத்தார்களும் சேர்ந்து தங்கள் விமானபலத்திஞல் நாஸிகள் தொழிற்சாலைகளைத் தாக்காமலிருக்கும்படி, வரக்கூடாத தூரத்தில் அப்புறப்படுத்த ஒருபொழுதும் முடியாது. இப்படி நான் சொல்வது ரொம்பகாலம் ஸ்ரமித்து நடக்கக்கூடியதுமில்லை, மனோராஜியமுமில்லை. இங்கே தொழிற்சாலைகளில் மனிதர்கள் மிகவும் பிரயாஸையுடன் வேலைசெய்கிறுர்கள் என்று எனக்குத் தெரியும். கொஞ்சமும் பதராமல் இங்கிலாந்தில் கப்பல் கட்டுகிறவர்களுக்குக் கஷ்டமான திசை என்பதும் இந்தக் காலத்தில்கூட அவர்கள் விட்டுக்கொடுக்கவில்லை என்பதும் எனக்குத் தெரியும். எங்கள் தேசத்தினரும் அறிவார்கள். இப்பொழுது கட்டிவரும் கப்பல்களுக்கு சில மாதங்களுக்குமுன் பிளான்கள்தான் தயாரித்துவந்தன. இப்பொழுது அவையாவும் கப்பல் கட்டுமிடங்களில் தயாராகிவருகிறது. இனி அவைகள் முடிக்கப்பட்டதும் சமுத்திரத்தில்சென்று இங்கிலாந்துக்கு அதிகம் சாமான்கள் ஏற்றிச்செல்லும்.

ஆகார ஸப்ளையைப்பற்றியும் நாங்கள் கவனித்துவருகிறோம். பிரிடிஷ் மக்கள் பட்டினியாயிருக்கும்படி அமெரிக்கா ஒருபோதும் விட்டுவிடாது. ஆகாரத்தில் செலவை மட்டுப்படுத்திக்கொண்டு அதிகம் உற்பத்திசெய்ய தீர்மானித்திருக்கிறோம். வருகிற பனிரெண்டு மாதங்களில் ஏராளமான, பாலாடையும் பன்றி மாமிசமும், முட்டைகளும், டப்பிகளில் அடைத்த மீன்களும், திராக்ஷை ரஸமும், புட்டிப்பாலும், பழரஸமும் வந்துசேரும். யுத்தத்திற்குத் தேவையான இன்னும் ஜீவாதாரமுள்ள பலசாமான்கள் உற்பத்திசெய்யப்பட்டு அனுப்பப்படும். அவைகள் இரும்பு, எஃகு, பழய இரும்பு, கலப்பு எஃகு, இரும்புப் பாளங்கள், பித்தளை, தாமிரம், மசகெண்ணெய், பெட்ரோல், மரம், ஆணிகள், மரப்பட்டை, பேபர், பருத்தி.

யந்திர சாமான்கள், ரோடு போடத் தேவையான சாமான்கள், விவசாயக் கருவிகள் மருந்து, பட்டு, கயிர், நெருப்பணைக்கும் குழாய், வைத்திய முறைக்கு வேண்டிய சாமான்களும் இம்மாதிரி சாமான்கள் உற்பத்தி செய்து பிரிடனுக்கு அனுப்பும்படிக்குள்ள பெரிய திட்டத்தை விருத்தி செய்யும்படி அமெரிக்கா காங்கிரஸ் பாஸ் செய்திருக்கும் "குத்தகைக் கடன் மசோதா" வில் பிரஸிடெண்டுக்கு அதிகாரத்தைக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதோடு மட்டுமில்லாமல் ஜனநாயகத்தைக் கெடுக்கப் பார்க்கும் ஜப்பானுக்கு எதிரில் கிழக்கே சண்டை போடும் சைனுவையும், நாங்கள் மறக்கவில்லை. அவ்விதமே தங்கள் நாட்டைக் காப்பாற்ற பிரமாதமாக யுத்தம் செய்யும் ருஷ்யர்களையும் மறக்கவில்லை. இவ்விரு நாடுகளுக்கும் உடனே உதவி செய்யத் தீர்மானித்துவிட்டோம்.

யுத்த தளவாடங்கள் கொடுக்கும்படி உங்கள் பிரதம மந்திரி கேட்டுக் கொண்டார். அவைகள் வந்து கொண்டிருக்கின்றன. அமெரிக்காவின் மேற்கு கடற்கரையிலிருந்து மத்தியக்கிழக்குக்கும் ஓயாமல் பொருள்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. அதில் குறிக்கிட யாராலும் முடியாது.

வழியில் வந்து கொண்டிருக்கும் ஏராளமான யுத்த தளவாடங்கள் பிரிட னுக்குப் பத்திரமாக வந்து சேரும். அவ்விதம் பத்திரமாகச் சேரும்படி வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் போகிறதாக, ரூஸ்வெல்ட் உறுதி கூறியிருக்கிறுர். அவர் வார்த்தை வீண்போகாது. பிரிடிஷ் மக்களே! நீங்கள் தனித்து நின்று போர் புரிவதாக நினைக்கவேண்டாம். எஙகள் உபபலம் உங்களுக்கு உண்டு.

---

## பிரிடிஷ் விமான வெடிகுண்டுகள், எவ்விதம் குறிப்பிட்ட லக்ஷியத்தை அடிக்கின்றன.

## விமானிக்கும் குறிபார்த்தடிப்பவனுக்கும் ஏற்பட்டிருக்கும் ஐக்யம்.

## குறிதப்பாமல் அடிப்பதற்குக் காரணம்.

[ஒரு விமானப்படைத் தலைவருடைய பி. பி. ஸி. பிரஸங்கம்.]

ஜெர்மனியிலும், ஜெர்மானியர் வியாபித்த தேசங்களிலுமுள்ள குறிப்பிட்ட லக்ஷியங்களை இரவில் வெடிகுண்டுமூலம் தாக்குவது வெகு எளிதல்ல. இருந்தாலும் இராப்போரில் ஜெர்மனியைவிட நமக்கு அதிகம் வெற்றி கிடைத்திருக்கிறது.

யுத்தம் ஆரம்பிக்கும்பொழுதே நாங்கள் இரவில் வெகு எளிதாக லக்ஷியங் களைக் கண்டுபிடிக்க முடிந்தது. இதற்குக் காரணம் எங்களுக்கு ஏற்கனவேயுள்ள பயிற்சிதான். ஆகையால் மேகமறைவில் இருந்துகொண்டு கண்ட இடத்தில் நாங்கள் குண்டுகளைப் போடுவதில்லை. ஆனுல் எதிரிகளோ, இவ்வளவு விரிவாக இரவில் யுத்தம் நடக்குமென்று எதிர்பார்க்கவில்லை. ஆகையால் அவர்களின் பயிற்சியும் மிகக் குறைவானது. மேலும் அவர்களுக்கு, எங்களுக்கு இருப்பது போல் குறிபார்க்கும் கருவியும் கிடையாது.

சரியானபடி குறியைப்பார்க்க வெடிகுண்டுகளைப்போடுகிறவன் மற்ற விமான சிப்பந்திகளோடு டெலிபோன்மூலம் அடிக்கடி சங்கதிகள் பேசவேண்டும். அதனுல் அவ்வப்போது கீழே நடக்கும் விஷயங்களைப்பற்றி ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது வெகு எளிது.

சரியானபடி குறியைப் பார்க்க, குண்டுகள் போடுகிறவன் விமானத்தின் முன் முனையிலிருக்க வேண்டும். அப்பொழுதுதான் எல்லாவற்றையும் யாதொரு இடைஞ்சலன்னியில் ஸ்பஷ்டமாகப் பார்க்கலாம். இவனுடைய லக்ஷியத்தை அருகாமையிலுள்ள ஒரு நிலக் குறிப்பைக்கொண்டு நிதானிக்கவேண்டும். நல்ல பயனை அடையவேண்டுமானுல் அவன் இருக்கும் நிலை விமானத்தின் அமைப்பைப் பொருத்தது.

உதாரணமாக "வெல்லிங்டன்" என்னும் விமானத்தில் குண்டு எறிகிறவன் குப்புறப் படுத்துக்கொள்ளவேண்டும். ஆனால் "விட்லி" "ஹாம்ப்டன்" என்ற விமானங்களில் அசௌகரியமான ஒரு ஆஸனத்தில் நிமிர்ந்து உட்காரவேண்டும்.

லக்ஷியத்தைக் குறிபார்த்து வெடிகளைப் போடும்போது, எதிரிகளின் நில பீரங்கிகளை லக்ஷியம் செய்யாது விமானம் ஒரே உயரத்தில் நேரே பறக்கவேண்டும். அப்பொழுதுதான் வெடிகுண்டுகள் போடுகிறவனுக்கு லக்ஷியமானது மறையாமல் இருக்கும்.

சில சமயங்களில் சோதனை விளக்குகளின் பிரகாசத்தால் வெடி போடுகிற வனுக்குப் பார்க்கமுடியாமல் போய்விடும். அதனால் மறுபடியும், மறுபடியும் லக்ஷியத்தை நோக்கிச் செல்லவேண்டிவரும். குறிபார்த்து குண்டுகள் வீசுவதில் என்னுடைய அனுபவம் 'ஹாம்ப்டன்' வகுப்பு விமானத்தில் ஏற்பட்டது.

ஹாம்ப்டனில் குண்டு வீசுகிறவனுக்கு இரண்டு முக்கிய வேலைகள் உண்டு. 500-மைலுக்கு மேலுள்ள சமுத்திர பாகத்தையும் விரோதியின் தேசங்களையும் கடந்து, குறிப்பிட்ட லக்ஷியமிருக்கும் பிரதேசத்தில் சரியாக வந்து சேரவேண்டியது குண்டு வீசியின் பொறுப்பு. ஆதலால் குறிப்பிட்ட இடம் வந்து சேரும்வரை அவன் தான் விமானத்தைத் செலுத்தவேண்டும்.

ஏற்கனவே இவனுடைய லக்ஷியத்தை, அருகாமையிலுள்ள நிலக்குறிப்பை வைத்து நிதானித்துக்கொண்டு, லக்ஷியமிருக்கும் பிரதேசத்திற்கு நேராக வந்ததும், விமானத்தை அங்குமிங்கும் அசையவிடாமல் வைத்துக்கொள்வான். மேலும் இதற்குமுன் அந்த இடத்தில் சிலர் குண்டுகள் போட்டதினால் ஏற்பட்ட வெளிச்சத்திலிருந்து, இவன் இடத்தை சுலபத்தில் தெரிந்துகொள்ளக்கூடும்.

இதற்குப் பிறகு விமானம் ஓட்டும் வேலையை மற்றொருவனிடம் கொடுத்து விட்டு, இவன் வெடிகுண்டு எறிய ஆரம்பிப்பான். இதற்கு முந்தியே லக்ஷியமிருக்கும் பிரதேசத்திலிருந்து, விமானம் செல்லும் தூரத்தைப்பற்றியும், எவ்விதம் வெடிகள் வீசவேண்டுமென்பதைப்பற்றியும் பேசிக்கொண்டு அதற்குத் தக்கவாறு குறி பார்க்கும் கருவியையும் அமைத்துக்கொண்டிருப்பான். குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததும் ஏற்கனவே செய்துள்ள யோசனை சற்று மாறக்கூடும். இதனால் கருவியையும் அடியோடு மாற்றவேண்டிய அவசியமில்லை.

இத்தகைய தீர்மானங்களைக்கொண்டு தென்மேற்கு திசையில் ஒரு ஸ்தலத்தை 10,000 அடி உயரத்திலிருந்து எதிர்க்கப்போவதாக வைத்துக்கொள்வோம். அதன் அருகாமையில் வரும் சமயம் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்க்கும் பொழுது எதிர்க்கவேண்டிய இடம் கம்மலாய்த் தெரியும்.

இத்தருணத்தில் நில பீரங்கிகள் விமானத்தைத் தாக்கும். கீழிருந்து வரும் வெடிகுண்டுகள் வெடிக்க ஆரம்பிக்கின்றன. சில குண்டுகள் விமானத்தைச் சேராமல் அதன் கீழேயும் வெடித்துவிடும். ஆனால் நில பீரங்கிக்காரர்கள் பரீக்ஷை செய்து, வேண்டிய உயரத்திற்குச் சுடுவார்கள். நேராகத் தாக்கும் குண்டுகளுக்

கெதிரில் விமானி பாச்சல் காட்டப் பார்க்கிறான். வெடிகுண்டுகளுக்குத் தப்புவதுடன் தாம் எங்கேயோ போகப்போகிறோம் என்று விரோதிக்குத் தப்பு அபிப்பிராயத்தை உண்டுபண்ணுகிறான்.

இத்தருவாயில்தான் விமானிக்கும் வெடிகுண்டு போடுகிறவனுக்கும் நெருங்கின ஒத்துழைப்பு இருக்கவேண்டும். விமானப்படைத் தலைவன், விமானம் சுடும் பீரங்கிகளிடமிருந்து தப்புவதற்குக் கவனம் செலுத்திவருகிறான். நாலாபக்கங்களிலிருந்தும் குண்டுகள் வந்து கொண்டிருக்கும். அதோடு அந்த லக்ஷியத்தை விட்டும் விலகக்கூடாது. விலகினால் வந்த காரியம் நடக்காது.

வெடிகுண்டு போடவேண்டிய இடம் இறுதியில் நெருங்கப்பட்டவுடன் "ஆக் ஆக்" என்று உத்தரவு பிறந்தாலும், பிறக்காவிட்டாலும், வெடி குண்டு போடுகிறவனுடைய மூகரூப உத்தரவுப்படி ஒரே நிலையாக விமானி நிதானமாய்ச் செலுத்துவான். லக்ஷியம் மிகவும் இடது பக்கத்தில் இருந்தால், "இடது பக்கம், நிதானமாய்" என்று உத்தரவு கொடுக்கப்படும். அந்த இடம் இன்னும் இடது பக்கத்திலேயே இருக்குமானால் "சீக்கிரம் இடது பக்கம், இடது பக்கம்" என்று சொல்லப்படும்.

வெடிகுண்டு போடுகிறவனுடைய தொனி எவ்வளவு அற்பமாகயிருந்தாலும், விமானி அதைக்கொண்டு திருத்திக்கொள்வான். மேலும் வேண்டிய அளவுக்கு மேல் திருப்பிவிட்டால், 'வலது பக்கம்' என்று உத்தரவு பிறக்கும். அப்பொழுது விமானி வலது பக்கம் திருப்பி, குறிக்கப்பட்ட ஸ்தலமானது தூர திருஷ்டி கண்ணாடியில் தெரிந்தவுடன் 'நில்' என்ற உத்தரவு கொடுக்கப்படும். அப்பொழுதுதான் இவர்களுடைய பரிபூர்ண பரிபக்குவகாலம் வந்துவிட்டது. அவர்களுக்குள் ஏற்படும் ஒவ்வொரு முணுமுணுப்புக்கும் விசேஷ அர்த்தமுண்டு.

வர, வர குண்டுபோடவேண்டிய இடம் கண்பார்வைக்கு நேரே வந்து கொண்டிருக்கும். நேராக ஒரே மட்டத்தில் குண்டு வீச்சுக்காரருடைய வார்த்தைகளுக்கிணங்கி, விமானி விமானத்தை அசையாது, திசை தவறாது அதே உயரத்தில் நிறுத்திக்கொள்வான். அப்பொழுது வெடி வீசுகிறவன் சில சிறு உத்தரவுகளைக்கொடுப்பான். கீழேயிருந்தோ நில பீரங்கிகள் சுட்டுக்கொண்டே இருக்கும். ஆனால் இதை விமானத்திலிருப்பவர்கள் லக்ஷியம் செய்யமாட்டார்கள்.

பீரங்கிகளிலிருந்து கிளம்பும் ஜ்வாலையை தரையில் அவன் பார்க்கிறான். கீழேயிருந்து மழைபெய்தாற்போலவும், வானவில், பைத்தியம் பிடித்த பாம்பு போல் கீழேயிருந்து கிளம்பி வந்தாற்போலவும், இதைத் தேடிக்கொண்டு பல விமானங்கள் அடுக்கடுக்காய் வருவதைப் பார்க்கிறான்.

ஆனால் இவைகளைப்பற்றி நினைப்பதற்குப் பொழுதில்லை. எதிர்க்க வேண்டிய இடம் பார்வையில் பட்டுக்கொண்டிருக்கிறது. விமானத்திலிருந்து வெளுப்பும், கருப்புமாக குண்டுகள் கிளம்பி அதைக் குலுக்குகின்றன. இருந்தாலும் சிறிதும் தவறாமல்போன நிலையிலே விமானி நிதானமாய் ஓட்டுகிறான்.

விமானத்திலிருக்கும் மற்ற வேலைக்காரர்கள் கீழே நடக்கும் ஆரவாரத்தைக் கவனியாமல் அவரவர்கள் வேலையைப் பார்ப்பார்கள். உதாரணமாக வேலைக்காரன் தந்திவேலையை (Wireless) நிறுத்திக்கொண்டு, ஆகாய பீரங்கி வேலையைக் கைக்கொண்டு "பைடர்கள்" தோன்றுகின்றனவா என்று கண்கொட்டாது பார்த்துக்கொண்டிருப்பான். அதே மாதிரி இந்த விமானத்தின் பின் பாகத்திலிருக்கும் பீரங்கிக்காரன் தேசப்படத்தை வைத்துக்கொண்டு கீழே வெடிகள் வெடிப்பதை இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருப்பான்.

வெடிகுண்டு போடுபவனுக்கு தன் அரையிலுள்ள ஆயுதங்களைப்பற்றி நன்ருய்த் தெரியும். குண்டு போடவேண்டிய ஒவ்வொரு இடத்திலும் கண் வைத்தபடியே தலை நிமிராமல் ஒவ்வொன்ருக யந்திரங்களை அசைத்து கடைசியில் சரியான சமயத்தில் குமிழிகளை அமிழ்த்துவான்.

இதுசமயம் "வெடிகுண்டுகள் போட்டுவிட்டேன்" என்று கூரலிடுவான். இதுவரை டெலிபோன்மூலம் உத்தரவுகளைப் பெற்றுக்கொண்டதுபோக, இனி விமானத் தலைவன் பகைவரிடம் அகப்படாமல் ஓடப்பார்ப்பான்.

தங்கள் லக்ஷியத்தைக் கடந்துசெல்லும் தருவாயில் விமானம் அந்த இடத்திற்குத் தலைக்கு மேலேவரும். அப்பொழுது குண்டுவெடித்த இடங்களைக்கண்டு கொள்ள சௌகரியம் ஏற்படும். அதனுல் அதைப்பற்றி தேசப்படத்தில் குறித்துக்கொண்டு பின்னுல் இருக்கும் பீரங்கிக்காரன் வீசிய குண்டுகள் சமாசாரங்களைப்பற்றித் தலைவனுக்கு அனுப்பிக்கொண்டிருப்பான்.

இனி ஆகாய வேலியைக்கடந்து வெளியேறியவுடன், மாலுமிக்கு ஆயாசம் நீங்கி, கவலையில்லாமல் விமானத்தை ஓட்டித் திரும்பி வந்து சேருவான்.

---

# திடுக்கிடும் யாதாஸ்து.

## மே மாதம் 4-ம் தேதி ஹிட்லர் சொன்னது.
## கக்ஷித் தலைவர்களுக்குத் தனிப்பிரசங்கம்.
## லத்தீன் அமெரிக்க நாடுகள் உதவுகின்றனவாம்.

**டெயிலி டெலிகிராப்பின் வாஷிங்டன் நிருபர்—ஜூலை 17.**

பெர்லின் சான்ஸலிரியில் மே 4-ம் தேதி நாஸிக் கக்ஷித் தலைவர்களுக்கு ஹிட்லர் தனிமையில் செய்த பிரசங்கத்திலிருந்து ஜெர்மனியின் தற்போதைய அரசாங்க முறையைப்பற்றி அதிக விஷயம் தெரியவருகிறது. ரீஸ்டாக்கில் பேசியதற்கு சில மணி நேரம் முன்னுல் இப்பிரசங்கம் நடந்தது. அதில் நடக்கும் யுத்தத்திற்குக் காரணம் யுனைடெட் ஸ்டேட்ஸ் தானென்றும் பிரிட்டனை இன்னும் அதிகமாக விமானத்திலிருந்து தாக்குவதாயும் ஹிட்லர் சொன்னுன்.

இன்னும் அவன் சொன்னதாவது :—“ஸோவியத் அரசாங்கம், ஐரோப்பாவில் புது திட்டம் ஸ்தாபிப்பதற்கு மறைமுகமான இடைஞ்சல் செய்யாமல் இருப்பதற்கு வெறும் வார்த்தை போதாது, காரியத்திலும் காண்பிக்கவேண்டுமென்று மாலடோவிடம் தெரியப்படுத்தும்படி மாஸ்கோவிலுள்ள ஜெர்மன் பிரதிநிதிக்குச் சொல்லப்பட்டது. மூவரசு ஒப்பந்தத்தில் சேர்ந்து, சிநேகத்தை நிலை நிறுத்த ருஷ்யாவுக்குத் தருணம் கொடுத்து, பிரிடிஷ் சாம்ராஜ்ஜியத்தைத் தொலைக்க போதுமான உதவி செய்யவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறேன்”.

அப்படி பூர்ண ஒற்றுமை காட்டாவிடில் யூக்ரேன் காகஸிலுள்ளவர்கள் விடுவிக்கப்பட்டு ஜெர்மனியுடன் சேர்க்கப்படுவார்கள் என்றும் சொன்னான்.

இப்பேச்சின் குறிப்புகள் அமெரிக்காவுக்குச் சமீபத்தில்தான் கிடைத்தன. பாரின் கரெஸ்பாண்டென்ஸ் என்ற பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. யுனைடெட் ஸ்டேட்ஸ் கவர்ன்மெண்டுக்கு இதன் தாத்பர்யம் தெரியும் என்று சொல்லாமலே தெரிந்ததுதான். அமெரிக்காவிலுள்ள பிரிடிஷ் பிரதிநிதியும், ஸ்டாலினுக்கு ருஷ்யாவை ஹிட்லர் எதிர்க்கப்போகிறார் என்று இந்தப் பிரசங்கக் குறிப்புகளிலிருந்து ஊகித்துத்தான் சொன்னார். ஆனால் பிரிடிஷ் பிரதிநிதியின் எச்சரிக்கை பயன்படவில்லை.

இதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு பெர்லின் போய்வந்த மாலடோவ் ஹிட்லரைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொடுத்தார். அப்படியிருந்தும், ஹிட்லர், நாஸிக் கக்ஷிக் கூட்டத்தில் ஜெர்மன் க்ஷேமத்திற்கு விரோதமாக ருஷ்யா சூழ்ச்சி செய்துகொண்டிருப்பதாகக் குறை கூறுகிறான்.

ஒருக்கால் ஜெர்மனியை எதிர்க்க யூகோஸ்லாவியாவுக்குச் செய்த ருஷ்ய உதவியையும், பால்கன் நாடுகளை ஹிட்லர் பிடிக்க முயலுவதை ருஷ்யா அங்கீகரிக்காததையும் குறிப்பிட்டதாக ஆகலாம்.

ஹிட்லர் செய்த பிரசங்கத்தில், மிஸ்டர் ரூஸ்வெல்டும், யுத்த வெறி பிடித்த சில அமெரிக்கர்களும்தான் யுத்தத்தை நீடித்து நடத்துகிறார்கள் என்று கடுமையாகக் கண்டித்திருக்கிறது. இதனால் அமெரிக்கப் பணக்கார அரசாக்ஷிக்கு விரோதமாக ஐரோப்பாவை ஒன்று சேர்க்கவேண்டிய பொறுப்பு தனக்கு வந்திருக்கிறதாக ஹிட்லர் சொன்னான்.

அமெரிக்கா யுத்தத்தில் இறங்கினால் டாக்கரையும், மொராக்கன் துறைமுகங்களையும் ஜெர்மனியின் உபயோகத்திற்குக் கொடுக்கிறதாக விஷி வாக்களித்திருக்கிறதாம். லத்தீன் அமெரிக்க நாடுகளில், முக்கியமாக அர்ஜென்டைனாவில், செல்வாக்கு வாய்ந்தவர்கள் ஹிட்லருடன் சிநேகமாக இருக்கிறார்களாம். ஆகையால் அமெரிக்காவுடன் சண்டை செய்ய நேர்ந்தால் அது ஐரோப்பாவில் போடப்படாமல் தென் அமெரிக்காவிலேயே நடக்கும் என்றும் வெளியாகிறது.

ஜெர்மனியில், சில கக்ஷித் தலைவர்கள் இங்கிலாந்துடன் சமாதானம் செய்துகொள்ள அபிப்பிராயப்பட்டதாகவும், ஏற்கனவே இப்படிச்செய்துகொண்ட சமாதானப்பேச்சுகளை எல்லாம், இங்கிலீஷ்காரர்கள் ஜெர்மனியின் பலக்குறைவு

என்று எண்ணியதால் இப்பொழுது தானாக ஜெர்மனி மறுமுறை சமாதான பிரஸ்தாபத்தை எடுக்காதாம். ஆனால் ஹிட்லரின் ஐரோப்பிய புது ஒழுங்கை ஒப்புக்கொண்டு சமாதானம் பேச முன்வந்தால் சண்டையை உடனே ஜெர்மனி நிறுத்துமாம்.

இவ்விதமாகவெல்லாம் ஹிட்லர் பேசியதற்கு 6 நாள் பிறகுதான் அவரது அத்தியந்த சிநேகிதன் ஹெஸ் ஸ்காத்லாந்துக்குப் பறந்து சென்றார். வெற்றிகரமான பால்கன் யுத்தத்திற்குப் பிறகு சமாதானம் செய்ய முயற்சித்தவர்களில் இவர் ஒருவராக இருக்கலாம்.

இவ்வருஷத்திற்குள் யுத்தம் முடியாதென்று ஹிட்லர் ஒப்புக்கொண்டிருக்கிறார்:—"இவ்வருஷத்திற்குள் சண்டை முடியாது, இன்னும் நடைபெறும் என்று ராஜீய சிநேகிதர்கள் நம் ஜனங்களுக்குச் சொல்லவேண்டும்" என்றும் சொன்னார்.

"ஜனங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களையும் வறுமையையும் தடுக்க விரும்பினேன். ஆனால் யுத்தத்தை நிறுத்த முடியாததால் அவை இன்னும் இருக்கவேண்டியதுதான். ஜெர்மானிய ஸ்திரீ புருஷர்கள் யாவரும், ஜெர்மானிய வாலிபர்களும் யுத்த சாமான்கள் செய்யமுடிந்தவரை உதவத்தான் வேண்டும். அதனால் அமெரிக்க சாமான்களைக் காட்டிலும் அதிகம் செய்யவேண்டும்".

"இது ராக்ஷஸ யுத்தமே, எனக்கு கடவுள் அதிக வயது கொடுக்கவில்லை. ஆதலால், சத்ருக்களைத் தொலைத்து வெற்றிபெறும்வரை ஜீவித்திருக்க விரும்புகிறேன்".

விஷித் தலைவர்களை "கையாட்கள்" என்று வெறுப்புடன் சொன்னான்.

அவர்கள் வட ஆபிரிக்காவில் உதவுவதாக வாக்களித்திருந்தும் ஹிட்லர் பின்வருமாறு சொன்னான். "பிரான்ஸுக்கு விரோதமாக, எல்லாத் தேவைகளையும் கொடுக்கிறதாக முஸோலினிக்கு வாக்களித்திருக்கிறேன்".

---

# ஹூண ஜாதியைச் சேர்ந்த ஹிட்லரின் நோக்கமென்ன?

---

## லிபாவின் தற்காப்புச் சரித்திரத்தின் சுருக்கம்.

**"நியூஸ் கிரானிகள்" பத்திரிகையின் முன்னிருந்த மாஸ்கோ நிருபர், ஜான் ஸ்காட், டோகியோவிலிருந்து கேபிள் மூலம் அனுப்பிய செய்தி—ஜூலை 10.**

ஜெர்மானியர் மூலமாக பெர்லினில் ஏற்பட்ட பிரசுரத் தடையினால், லிபாவின் தற்காப்பு விவரங்கள் ஐந்து நாட்கள் கிரமித்துத்தான் டோகியோவுக்குக் கிடைத்தன.

பூரா ஐந்து நாட்களில் ஜெர்மன் 'பான்ஸர்' படை வீடுகளையும், தெருக்களையும் தகர்த்துச் சென்றது. லப்ட்வாபி என்ற ஜெர்மன் விமானப்படை பீரங்கிகளாலும், குண்டுகளாலும் தாக்கியது.

ஜெர்மானியர் நகரத்திற்குள்ளே செல்ல முயற்சித்த போதெல்லாம் தரைக் கண்ணிகளாலும் குண்டுகளாலும், பீரங்கிகளாலும் ஒவ்வொரு வீடுகளிலிருந்தும் ஜனங்கள் எதிர்த்தார்கள்.

தெருக்களில் நுழையவிடாமல், நாலாபக்கங்களிலும் அடைப்புகள் மூலம் தடைசெய்யப்பட்டன. கண்ணிகளை வீசியும் இன்னும் தங்களிடம் இருக்கும் யந்திர சாதனங்களைக்கொண்டு தாக்கியும், எதிரிகள் பட்டணத்தில் நுழைய விடாமல் எதிர்த்து நிற்கும் லிபா ஜனங்களின் பலத்தைக் குறைக்கப் பிரயத்தனப் பட்டார்கள்.

துறைமுகமாக இருப்பதை அழிக்காமல் லிபாவைக் கைப்பற்ற முடிய வில்லை என்று தெரிந்த மேல், பொதுமக்கள், ராணுவ நிலயங்கள், இவைகளை வித்தியாசமன்னியில் ஈவிரக்கமன்றி வெடிகுண்டு மூலமும், பீரங்கிப் பிரயோகம் மூலமும் பூரா நகரத்தையும் தாக்கும்படி ஜெர்மானியர் உத்தரவிட்டார்கள்.

முன்னேறிச் சென்ற ஜெர்மன் படையுடன், கூடப்போன ஜெர்மன் நிருபர், லிபாவின் ஸ்திரீகளும், குழந்தைகளும், குண்டுகள் எறிந்தும், கைத்துப்பாக்கிகள், பீரங்கிகள் மூலம் உள்ளே பிரவேசிக்கும் ஜெர்மன் யந்திரப் படையை எதிர்த்த தாகச் செய்தியனுப்பினர்.

அங்கே ஒருவரும் உயிருடன் இருக்கமுடியாதென்று சொல்லும்படி, பீரங்கிக் குண்டுகளால் தகர்க்கப்பட்டு எரிந்து கொண்டிருக்கும் ஒரு வீட்டிலிருந்து, ருஷ்ய, லாட்விய பொதுமக்கள் ஜெர்மானியர் மீது குண்டுகள் எறிந்தனர்.

ருஷ்யச் சைனியப் பயிற்சியிலும் முக்கியமாக ராணுவ அதிகாரியின் திட்டத்திலும் எனக்கு அதிக நம்பிக்கையுண்டு. பொது மக்கள் எதிர்ப்பு, சிறு சண்டைகள் மறைந்து போடுவது, விரோதிகளின் சைனியத்தில் பொய் வதந்தி ஏற்படுத்தி அவர்களைத் திருப்பிவிடுவது, இத்தகைய காரியங்கள் செய்வதில் ருஷ்யர்கள் நிகரற்றவர்கள்.

---

# ஜப்பானின் விமான பலம்.

**'மான்செஸ்டர் கார்டியன்' நிருபர் எழுதியது.**

ஜப்பானுடைய விமானங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று தெரியவில்லை. நிலைமையை கவனிப்போர், சைனாவோடு சென்ற 4 வருஷங்களாகச் செய்த சண்டையில் 900 முதல் 1,200 விமானங்கள் வரை உபயோகித்து வந்ததாகவும்,

மொத்தத்தில் வியாபாரத்திற்கு உதவும் விமானம், சைனியம் ஏத்திச் செல்லும் விமானங்கள் உள்பட 3,000 விமானங்கள்தான் உண்டென்றும் சொல்லுகிறார்கள். இவையாவும் தாழ்ந்த திறமுள்ளவைதான். ஏழு விதமான பைடர் விமானங்களில், 550 குதிரைச்சக்தி (H. P.) வாய்ந்தவைதான் இருக்கின்றன. மணிக்கு 300 மைல் வீதம் செல்லக்கூடியவையே.

ஏழு வருஷங்களுக்கு முன்னிருந்த பிரிடிஷ் விமானங்களுக்குச் சமமாக தற்போதய ஜப்பானிய பாம்பர் (குண்டு வீசும்) விமானங்களைச் சொல்லலாம். ஐரோப்பாவின் விமானங்களுடன் ஒப்பிட்டு கவனிக்கும்போது ஜப்பானிய விமானங்கள் பழைய ரகமென்று தள்ளுபடி செய்யப்பட்டவைகள்; அமெரிக்கா, பிரிடன், பிரெஞ்சு, ஜெர்மன், இதாலிய விமானங்களைப் பார்த்துச் செய்யப் பட்டவைதான். சில வருஷங்கள் வரை வேண்டியமாதிரி, மற்ற தேசங்களில் இருந்து விலைக்கு வாங்கியும், லைஸென்ஸுக்கு ஜப்பானில் செய்யப்பட்டும் உபயோகித்து வந்தது.

சண்டை விமானங்கள் 20 தொழிற்சாலைகளில் வருஷத்திற்கு 8,000 வரையில் செய்யப்படுகின்றனவாம். நகோயா (Nagoya) தொழிற்சாலையில் 15,000 பேர்கள் வேலை செய்கிறார்கள்; மிட்ஸுபிஷியில் உள்ள 4 தொழிற்சாலைகளில் இன்னும் அதிகமாக இருக்கிறார்கள். அங்குதான் இருவர் சொல்லக்கூடிய பைடர் விமானங்களும், பாம்பர் விமானங்களும், பறக்கும் கப்பல்களும் கட்டப் படுகின்றன.

தன்னுடைய விமானங்களை அபிவிருத்தி செய்யவே ஜப்பான் அச்சுநாடுகளுடைய உதவியை நாடியிருக்கிறது. டோகியோவில், லைஸென்ஸ் பெற்றுக் கட்டப்பட்ட, ஜெர்மனியின் 'மெஸ்ஸர்ஸ்கிமிட்' (Messerschmitt) 109 பைடர் விமானங்களைப்போல் இப்பொழுது சண்டையில் சைனாவில் உபயோகிக்கின்றதாம். இன்னும் அதேமாதிரி சில யூங்கர்-86-K ஜெர்மன் பாம்பர்களை ஒத்திருக்கின்றன. ஆனால் இவைகளை நாஸிகள் பிரயோஜனமில்லை என்று விட்டுவிட்டார்கள். ஜப்பானுக்குள் இவைதான் முதல்தரமானவை.

மூன்று வருஷங்களுக்கு முன்பு இதாலி பையட், பிஆர் 20—வகையில் வேறு 80 பாம்பர்கள் ஸப்ளை செய்தது. இப்பொழுது லைஸென்ஸின்பேரில் அங்கேயே செய்யப்படுகின்றன.

சாதாரணப் பிரயாணிகள் ஏறிச்செல்லும் விமானங்களெல்லாம் லைஸென்ஸின் பேரில் ஸர்க்கார் தொழிற்சாலைகளில் கட்டப்படுகின்றன. இவைகளில் அமெரிக்க டக்லஸ்—DC-3-ம், டச்சு பாக்கரும் முக்கியமானவை.

இப்பொழுது ஜப்பானுக்கு விமானங்களைப் புதிதாகக் கட்டுவதற்கும், வைத்துக்கொள்வதற்கும் அதிக சிரமம் இருக்கிறது. ஏனென்றால் இவைகளைக் கட்ட இரும்பு முதலிய சாமான்களும் எண்ணெயும் வெளிநாட்டிலிருந்துதான் வரவேண்டியிருக்கிறது. கனடாவிலிருந்து பெற்ற அல்லுமினியும், நிக்கல்,

தாமிரம் 9 மாதங்களுக்கு முன்னே நின்றுவிட்டன. விமானத்திற்குத் தேவையான அலுமினியமும் அல்லாய் தயார் செய்யக்கூடிய மண்ணும் கிடைக்கவில்லை.

விமானங்களுக்குத் தேவையான உயர்தர பெட்ரோல் எண்ணெயை அமெரிக்கா இனி அனுப்பாது. மேலும் கசண்டு எண்ணெயை சுத்தம் செய்யக்கூடிய சாதனங்களும் ஜப்பானிடம் போதுமான அளவு இல்லை. பிரிடன், அமெரிக்கா, டச்சு நாடுகள், கப்பல் அனுப்பும் விஷயமாகத்தடை உத்தரவு போட்டுவிட்டதால், இண்டோ-சைனாவும் ஜப்பானுக்குப் பெட்ரோல் அனுப்ப மறுத்துவிட்டது. ஆகையால் டச்சு நாடுகளுடன், உயர்தர எண்ணெய் வாங்குவதற்குச் செய்த ஒப்பந்தம் ஈடேறவில்லை.

---

# நாங்கள் தாமதிக்காமல் வருகிறோம்.

## இரானில் நடப்பது.

நாஸி ஐந்தாம் படை இரானில் வேலை செய்யாதோவென்று ஜெர்மானியர் கவலைப்படுகின்றனர். டியூட்ஸ்சி டிப்ளோமேட்ஸ்சி, பொலிட்ஸ்சி கரெஸ்பாண்டென்ஸ் என்ற பத்திரிகைகள் ஆகஸ்டு 2-ம்தேதி பெர்லினில் செய்த ஒலி பரப்பை முன் கோளாக்கொண்டு சொன்னதாவது: "அன்னியர்களின் செய்கைகளைப் பரவவிடாமல் செய்யும் இந்த தேசத்தில் பொய் வதந்திகள் கற்பிக்கிறவர்களை அடக்கிவிடுவார்கள். தண்டனைக்குட்படக்கூடியதால் அயலார் விஷமப் பிரசாரம் செய்யமுடியாது.

1934-ம் வருஷத்தில் கைதேர்ந்த 3 ஜெர்மானியர்கள் சில குறிப்புகள் தயாரித்தனர். அவையாவன:—"பாக்தாத் ரயில்வே போட்டு உதவுவதாக வாக்களித்தபடி, சமீபத்திலும், கிழக்கிலும் உள்ள இடத்தைக் கைப்பற்ற வேண்டும். இவ்விதம் டான்யூப் முதல் பாஸ்பரஸ் ஜலசந்தி வரையிலுள்ள கிழக்குப் பாகத்தை ஜயித்தால் ஜெர்மன் விலங்குகள் அறுபடும். அவைகளில், துருக்கி—எகிப்தும், இரானும் தான் மிகவும் முக்கியமானவை" என்ற இந்த எண்ணங்கள் பலிக்காது.

## ஆகஸ்டு மாதத்திய அனுகூல பிரதிகூலங்கள்.

"நாம் சும்மாயிருந்தால், நமக்காக யுனைடெட் ஸ்டேட்ஸூம், ருஷ்யாவும் சண்டை ஜயித்துத் தருவார்கள் என்று நினைப்பது சுத்தப் பயித்தியக்காரத்தனம்" என்று ஜூலை 29-ல் மிஸ்டர் சர்ச்சில் சொன்னார்.

இவ்விதமான வார்த்தை மிகவும் நிதானம் கொண்ட வார்த்தை. இதை மனதில் வைத்துக்கொண்டு, சென்ற ஒரு வருஷ காலமாக சிரமப்பட்டு புரியப்பட்ட யுத்தத்தினால் ஏற்பட்ட மாறுதல்களைக் காணலாம்.

## 1940 ஆகஸ்டு.

1. ருஷ்யாவுடன் செய்துகொண்ட பொருளாதார ஒப்பந்தம் ஜெர்மனிக்கு அதிக நன்மையைச் செய்கிறது. ரிப்பன்டிராப்பினால் அனாக்கிரமிப்பு ஒப்பந்தத்தின்படி சேர்க்கப்பட்ட எல்லைகளின் உதவியால் பிரிட்டனை முழு பலத்துடன் எதிர்க்கலாம்.

2. பிரிடன் மீது ஏராள்மான குண்டுகளை வீசுவதால் பிரிடிஷ் விமானங்கள் தற்காப்பு விஷயத்தில் ஈடுபட்டன. 1,000 பிரிடிஷ் பொதுமக்கள் இறந்தனர். இதனால் ஆகஸ்டு 15-ல் ஜெர்மன் லுப்ட்வாபிக்கு 180 விமானங்களும், 18-ல் 152 விமானங்களும் நஷ்டம்.

3. பிரிடன் மீது ஜெர்மன் விமானம் படையெடுக்கும் என்று பயமுறுத்துவது, ஆகஸ்டு 15-ல் ஹிட்லர் லண்டனுக்குள் வருவதாகச் சொன்ன நாஸிப் பிரசாரத்தைக் காட்டிலும் பொல்லாதது.

4. எகிப்து எல்லைகளில் பிரிடிஷார் சிறிய எதிர்ப்புடன் கூடிய தற்காப்பு தந்திரத்தைக் கையாளுகிறார்கள்.

5. ஆகஸ்டு 19-ல் பிரிடிஷ் துருப்புகள் பிரிடிஷ் சோமாலிலாந்தைக் காலி செய்தன. செங்கடலில் பிரிடிஷாரின் அதிகாரத்தை இதாலியர் பிடிங்கி விட்டார்களாம்.

## 1941 ஆகஸ்டு.

1. நாசத்தையும், சிரமத்தையும் அளிக்கும் ருஷ்ய யுத்தம் பொருளாதார சாதகத்தை மாற்றிவிட்டது. ஆறு வாரங்கள் ஆகியும் ஜெர்மானியர் ஒரு லக்ஷியத்தையும் அடையாததோடு, ருஷ்யர்களுடைய சைனியமும் கெடுதலை அடையவில்லை.

2. ஜெர்மனி மீதும் ஆக்கிரமித்த நாடுகளிலும், பிரிடிஷ் விமானப்படை இரவும் பகலும் நாளுக்கு நாள் அதிகமாகப் பாய்ந்து தாக்குகின்றன.

பிரிடன் பேரில் ஜெர்மன் தாக்கல்கள் குறைந்து விட்டன.

3. இப்பொழுது ஜெர்மனியின் பேரில் படையெடுப்பார்கள் என்று ஜெர்மானியர் பயப்படுவதிலிருந்தே எவ்வளவு மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்று தெரியவரும்.

ஆகஸ்டு 1-ம் தேதி பெர்லினில் ஹிந்துஸ்தானி ஒலிபரப்பில் "ஐரோப்பாவில் பெரும் எதிர்ப்பு உண்டாகும்" என்று பிரிடிஷ் சமாசார மந்திரி மிஸ்டர் பிரெண்டன் பிராக்கன் ஜோஸ்யம் சொல்லியிருப்பதை ஜெர்மானியர் தெரிவித்தனர்.

4. பிரிடிஷ் படையும், சாம்ராஜ்ஜியப் படைகளும் எகிப்து எல்லைகளைக் காத்துவருகிறார்கள். ஆனால் அதோடு எகிப்தைத் தாக்க இருந்த இதாலிய சைனியத்தைப் பாழாக்கினர்.

5. மறுபடியும் பிரிடிஷ் ஸோமாலிலாந்து கைப்பற்றப்பட்டது. இதாலியரும் ஆபிரிக்காவிலுள்ள நாடுகளை இழந்தனர். செங்கடலில் விரோதி நடமாட்டமில்லாததால், அமெரிக்கச் சாமான்கள் நடுக்கிழக்கு யுத்தப் பிரதேசத்திற்கு வர முடிகிறது.

**1940 ஆகஸ்டு.**

6. ஜெர்மானியரும், இதாலியரும் நடுக்கிழக்கில் லஞ்சம் கொடுத்து சூழ்ச்சிகள் செய்து வருகிறார்கள். அவர்களுடைய ராணுவ முயற்சிகளுக்குத் தகுந்தாற்போல் நம்பிக்கை துரோகமும், கலகமும் உண்டுபண்ணுகின்றனர்.

7. "பிரிடன் பூரா சூழப்பட்டது" என்று ஆகஸ்டு 17-ல் ஜெர்மனி சொல்லிற்று.

8. ஆகஸ்டு 20-ல் சர்ச்சில் ஆங்கிலேய—அமெரிக்க ஒற்றுமையைப்பற்றி "அது அபிவிருத்தியடையட்டும்" என்று சொன்னார். ஆனால் இப்பொழுதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் ஆவதற்குள்ளாக ரூஸ்வெல்ட் மறு முறை பிரஸிடெண்டாக வரக்கூடாதென்று ஜெர்மனியின் அபிப்பிராயம்.

**1941 ஆகஸ்டு.**

6. ஸிரியாவிலும், இராக்கிலும், பேர்ஸியன் குடாவைப் பிளந்து இந்தியாவிற்குச் செல்லுவதற்குச் செய்த அச்சு நாடுகளின் இரு பெரும் முயற்சிகள் முறிபட்டன. துருக்கி-ஸிரியன் எல்லை முதல் எகிப்து-லிபியா எல்லைவரையில் நடுக்கிழக்கு நாடுகளின் தற்காப்பு கெடுக்கப்படவில்லை.

7. ஆகாரத்திற்கும் இதர பொருள்களுக்கும் வெளிநாடுகளை எதிர்பார்க்கும் பிரிடன் பாதுகாத்துக்கொண்டிருப்பதோடு விளைபொருள்களை அதிகப்படுத்தியும் இருக்கிறது.

8. அமெரிக்கர்கள் ஐஸ்லாந்திற்கு வந்துவிட்டார்கள். வடகடலில் காவல் புரிகிறார்கள். பிரிடனுக்கும் நடுக்கிழக்குக்கும் சாமான்கள் அனுப்புவதை யாரும் தடுக்காமல் பார்த்துக்கொள்ளுகிறார்கள். பயத்தினால் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டை அதிகமாக நாஸிக் கக்ஷி நிந்திக்கிறது.

---

# கதம்பம்.

1. "ஜப்பான் அதிக்கிரமம் உயர உயர சைனா, பிரிடன் நட்பு அதிகமாகிறது".

(காமன்ஸ் சபையில் மிஸ்டர் ஈடன், ஆகஸ்டு 6.)

2. "எங்கள் க்ஷேமத்திற்கு உதவுவதோடு உலகத்தின் க்ஷேமத்திற்கும் பாடுபடுகிறீர்கள். அதற்கு பிரிடிஷ் மக்களுக்கு வந்தனம் அளிக்கிறோம்."

(டச்சு பொக்கிஷ மந்திரி, எம் கால்ட், லண்டனிலிருந்து ஒலிபரப்பியது ஆகஸ்டு 4.)

3. "சென்ற 100 வருஷங்களாக ஹிட்லராலும் அவனுக்கு முன்னிருந்தவர்களாலும் சொல்லிக்கொடுக்கப்பட்டதை மறந்து, நல்லதை ஜெர்மன் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்."

(மிஸ்டர் விகாம் ஸ்டீட் பி. பி, ஸி.-யில். பேசியது. ஆகஸ்டு 1.)

4. "கொடுங்கோன்மை எங்களுக்குப் பிடிக்காததுபோல் உங்களுக்கும் பிடிக்காது. நாங்கள் முடிவு வரை சண்டைபோடும் காரணங்கள் உங்களுக்கும் புனிதமானவை."

(மாகூிமை தங்கிய சக்கிரவர்த்தினி, லண்டன், ஆகஸ்டு 10.)

5. "எல்லா மதத்தினர்களும் ஜெர்மனிக்கு விரோதமாக போர் புரிகிறார்கள். ஏனென்றால் ஜெர்மானியர் நாஸ்திகர்கள்."

(ஸர். ஜார்ஜ் போக், மதராஸ், ஆகஸ்டு 15.)

6. "எதிரி பலம் ராணுவ பலம், நமது பலம் ஆத்ம பலம்—மன உறுதி. நாயின் பருவம் மாத்திரம் போதாது, வீரியம்தான் தேவை."

(மேஜர் ஜெனரல், கார்டன் பென்னட், மலேயாவில் பிரிடிஷ் சாம்ராஜ்ஜிய சைனியத் தலைவர், ஆகஸ்டு 15.)

7. "ஹிட்லரின் உபத்திரவங்களிலிருந்து உலகத்தைக் காப்பாற்ற யுத்தம் புரியும் யாவரும் ஒன்று சேருகின்றனர். இவ்விதமாக நாஸித் திருடர்கள் ஒளியும் இடங்களை பலம் வாய்ந்த நேசதேசத்தார்கள் சைனியங்களாகிற இரும்புச் சங்கிலியால் கட்டுகின்றனர்."

(பிரவடா, ஆகஸ்டு 17.)

8. "நாம் இவ்விதமாக ஒன்று சேர்ந்து எதிர்க்காவிடில் இனி ஸர்வ ஜனங்களுக்கும் சுலபமாக ஆகாரமும், ஸ்வதந்திரமும் கிடைக்காது. கிடைத்தாலும் நிலைக்காது."

(மிஸ். டொரோதி தாம்ஸன், ஆகஸ்டு 17.)

9. "ஸ்வதந்திரமுள்ள ஜனங்களுக்கு சர்ச்சில்தான் தலைவர். பிரிடிஷ் சாம்ராஜ்ஜியமும், ஸ்வதந்திர ஜனங்களும் அவரையே நம்பியிருக்கின்றன."

(ஸர். பிரடெரிக் ஜேம்ஸ், திருச்சி, ஆகஸ்டு 17.)

10. "பிலிப்பைன் தீவுகளுக்கு ஸ்வதந்திரம் கொடுப்பது அட்லாண்டிக் கடல் யுத்தத்தாலும், ருஷ்ய யுத்தப் பிரதேசத்திலும், தளவாடம் விருத்தி செய்வதாலும்தான் ஏற்படும்."

(பிரஸிடெண்டு க்வீஜான், மானிடோபா, ஆகஸ்டு 18.)

# ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

## ருஷ்யாவில் தற்சமயம்.

"ருஷ்யா முழுவதும், விரோதிக்கு ரகசியமாக உதவி செய்யப்படுகிறதாக ஜனங்கள் பிரஸ்தாபிக்கின்றனர்".

(ஹிந்துஸ்தானி பாஷையில் ஜெர்மன் செய்தி, ஜூலை 29.)

அவ்விதமில்லை. உதாரணமாக:—

(1) "லக்ஷக்கணக்கான ரூபாய் பொருமானமுள்ள உணவுப்பொருள்களை ருஷ்யர் நாசம் செய்கிறார்கள்."

(ஹாலந்திற்கு ஜெர்மன் ஒலிபரப்பு, ஜூலை 5.)

(2) "மின்ஸ்கில் கொஞ்சகாலம் வசதியாகத் தங்கலாமென்று ஒவ்வொரு ஜெர்மானியனும் எதிர்பார்த்தான். ஆனால் ஊர் எல்லாம் எரிந்து சாம்பலாகக்கிடந்தது. அதனால் வந்தவர்களுக்குத் தங்க விடுதிகள் கூட கிடைக்கவில்லை. மறைவாக நின்றும் சுட்டார்கள்". (டேர் ஆங்கிரிப்.)

(3) "கிஷ்ணவ் என்ற பட்டணத்தில் ருஷ்யர்கள் எல்லா வீடுகளுக்கும் நெருப்பு வைத்தனர். ஆகவே ஜெர்மானியர் இதைப் பார்க்கும்பொழுது திரும்பவேண்டியதாகத்தானிருந்தது".
(ரோம் ரேடியோ ஜூலை 20).

(4) "எரிந்து சாம்பலான வீடுகளைத் தவிர வேறொன்றும் இல்லை. கிராமம் கிராமமாக எரிந்து கொண்டு இருந்தது. காடுகள், தொழிற்சாலைகளெல்லாம் தீக்கிரையாயின. ஆகாயத்தில் புகைக்கூட்டம் சுவர்கள்போல் காணப்பட்டன."
(டியூட்ஸ் லாண்ட் ஸேண்டர், ஜூலை 24).

"யுத்தரங்கத்தை அமெரிக்க ராணுவ அதிகாரிகள் வந்து பார்க்கக்கூடாது என்று ருஷ்ய கவர்ன்மெண்டு சொல்லி விட்டது."
(இங்கிலீஷ் பாஷையில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 1).

பிரிஸிடெண்டு ரூஸ்வெல்டின் தூது கோஷ்டியைச் சார்ந்த மிஸ்டர் ஹாரி ஹாப்கின்ஸ் மாஸ்கோவுக்குச் சென்றார். இவருடன் அமெரிக்க தளகர்த்தர்களான ஜோஸப் மொனார்னியும் ஜான் அலிஸனும் சென்றனர். ஆகையால் நாஸிகள் விரும்பும்படி இல்லாமல் யாவரும் போய் வந்து கொண்டிருக்கிறார்கள்.

"ஸிரெனைகாவில் இங்கிலீஷ்காரர்களின் அட்டூழியங்களைத் தெரிவிக்கக்கூடிய பாதாஸ்துகள் கிடைத்திருக்கின்றன. ஜெனரல் மெயிட்லண்டு வில்ஸன் தான் இவ்விதமான கடும் செய்கைகளுக்குக் காரணம்".
(இங்கிலீஷில் இதாலியச்செய்தி ஜூலை 31).

மார்ஷல் கிரஸியானி எழுதிய புஸ்தகத்தைப்படித்து அனுபவம் வாய்ந்த இவர்கள் இப்படி பறை சாற்றுவது வியப்பை அளிக்கிறது. "லிபியாவில் ரோமர்களின் சமாதான முறை" என்ற அப்புத்தகத்தில் "ஜனங்களிடம் போலீஸ்காரர்கள் வேட்டை நாய்களைப் போல் பழக வேண்டும். கலகக்காரர்களை, வேட்டை நாய்கள் பற்களால் பிடுங்குவதுபோல் பாய்ந்து அடக்க வேண்டும். மனிதனுக்கு மனிதன் கொன்று சாய்க்கவேண்டும்" என்று கண்டிருக்கிறது.

## குறி தவறி விட்டது.

" தனியாகப் பறக்கும் ஜெர்மன் பாம்பர்கள், யார்மௌத், பிளிமௌத் என்ற பெரிய துறைமுகங்களில் பெரும் தீக்களை மூட்டும்படி குண்டுகள் வீசின".
(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி
ஜுலை 29.)

இவ்விடங்களுக்கு 40 மைல் தூரம் வரையில் ஒரு குண்டும் விழவில்லை. அன்று விரோதி விமானம் ஒன்று கூட பிரிடிஷ் கடற்கரைக்கு வரவில்லை. சேதமும் இல்லை. சில டெலிபோன் கம்பிகள் மாத்திரம் அறுக்கப்பட்டன.

"1940 டிஸம்பர் முதல் 1941 ஜுலை வரை ஆபிரிக்காவில் நடந்த சண்டைகளில் 7,000 இந்தியர் இறந்தனர்."

(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி,
ஜுலை 30.)

1941 ஜுலை 11-ம் தேதி கெரன் என்ற இடத்தில் 15,000 இந்தியச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதாக ஜெர்மனி ஒலிபரப்பியது.

உண்மையில் அவர்கள் சொல்லும் காலத்தில் ஆபிரிக்காவில் 6,427 இந்தியர்களுக்குக் காயம். (இந்த எண்ணிக்கை கோயபல்ஸ் கட்டின பொய்). அதில் 759 பேர்தான் கொல்லப்பட்டனர்.

இதே சமயத்தில் பிரிடிஷ் படை, மேற்குப் பாலைவனச் சண்டையிலும், ஸுடான், எரிட்ரியா, இடங்களில் முதல் சண்டையில் 2,13,000 எதிரிகளுக்குச் சேதம் விளைவித்தது.

## ஜெர்மன் பிரசார மந்திரி கோயபல்ஸின் 6 வாரக் கணக்கு.

### நாஸி தற்புகழ் மின்னல் பிரசாரம்.

### ருஷ்யா அறிவிப்பது.

*ஆகஸ்டு 2-ம் தேதி மாஸ்கோவில் நடந்த பத்திரிகைக் கூட்டத்தில் கிழக்குப் போர் முனையில் ஜெர்மன் பிரசாரத்தை நம்புகிறவர்கள் இல்லை என்று ஸோவியத் பொது விஷய நிலயத்தின் உப தலைவரான லாயோவ்ஸ்கி சொல்லுகிறார்.*

ருஷ்யா மீது திடீரென்று ஜெர்மனி பாய்ந்து இன்றோடு 6 வாரங்கள் ஆகின்றன. .........ஆரம்பத்தில் எல்லாம் திட்டப்படி நடக்கிறதாக ஜெர்மானியர் தெரிவித்தனர்.

**ஜுன் 26-ல் ருஷ்யப்படை பூராவாக தொலைக்கப்பட்டது** *என்றும்,* **இனி அதனால் எதிர்க்க முடியாதென்றும்,** *ரோம் ரேடியோ ஒலிபரப்பியது.* **ஜுன் 30-ல் ருஷ்யப் போக்குவரவு பூரா நாசமாக்கப்பட்டதாக** *ஜெர்மானியர் ஒலிபரப்பினார்கள்.* **ஜுலை 7-ல்** *ருஷ்யா,* **எல்லாவிதமான பலங்களையும் இழந்து விட்டதென்றும், ஜுலை 13-ல் ருஷ்யப் போர்முனையில் எல்லா முக்கிய இடங்களும் துளைக்கப்பட்டன** *வென்றும் லெனின்கிராட், மாஸ்கோ, கீவ் இடங்களுக்குச் செல்லும் பாதைகள் திறக்கப்பட்டனவென்றும் சொன்னார்கள்.*

ஆனால் சில வாரங்களாக ஜெர்மன் பத்திரிகைகளும், ரேடியோவும், அதிகாரிகளும், ரோம், ஹெல்ஸிங்கி, முதலிய இடங்களிலுள்ள நாஸி ஏஜண்டுகளும் வேறு விதமாகச் சொல்லுகிருர்கள். **கிழக்குப் போர்முனையில் சண்டை மேற்குப் போர்முனையிலிருந்த மாதிரி இல்லாமல் வேறுவிதமாக இருக்கிறது.**

ஜெர்மானியர் சொல்லுவதெல்லாம் வெறும் பொய்கள் என்று கீழ்கண்ட வித்தியாசங்களைப் பார்த்தால் தெரியவரும்;—

| தற்புகழ்ச்சி. | உண்மை. |
| --- | --- |
| "சில நாட்களுக்குமுன் ருஷ்யர்கள் பின் வாங்குவதைச் சொன்னேம். இப்பொழுது தலைவிரி கோலமாக ஓடுகின்றனர்." (ஜெர்மன் ரேடியோ, ஜூன் 30). | "ஆரம்பம் முதல் ஜெர்மன் எதிர்ப்புக்களை ருஷ்யர்கள் பிரதிப் பிரயோகங்களால் தாக்குகின்றனர்." (பிராங்க் புர்டர் ஜீடங், ஜூலை 16.) |
| "ருஷ்ய விமானப்படை எல்லா பலத்தையும் இழந்தது. இனி ஜெர்மன் முஸ்தீப்புகளைத் தடுக்கமுடியாது." (பேர்லின் செய்தியை ரோம் ஒலிபரப்பியது, ஜூன் 30.) | "ருஷ்ய குண்டுகள் ஜெர்மானியரை சில காரியங்கள் செய்யவிடாமல் தடுக்கின்றன." (ஜெர்மன் ரேடியோ, ஜூலை 15). |
| "ருஷ்யர்கள் எல்லாச் சேனையையும் சண்டையில் ஈடுபடும்படி செய்துவிட்டனர்." (ஜெர்மன் சமாசார நிலயம், ஜூலை 17.) | "ருஷ்ய அரசாங்கத்தார் ஏராளமாக சைனியம் சேகரித்து நம்மை எதிர்க்கின்றனர்." (நேஷனல் ஜீடங், ஜூலை 24). |
| "ராணுவ முறைப்படி ருஷ்ய டாங்கிகள் மிகவும் அற்ப சக்தி வாய்ந்தவை." (பிராங்க் பூர்டர் ஜீடங், ஜூலை 17.) | "ருஷ்யச் சைனியம் எல்லாச் சைனியங்களைக்காட்டிலும் நவீன மானது. இதோடு இன்னும் ஜெர்மானியர் சண்டைபோட வேண்டியிருக்கிறது." (ஜெர்மன் ரேடியோ, ஜூலை 27.) |
| "போல்ஷிவிஸத்தைத் தடுத்து கொடுமைகள் உலகில் பரவாமல் செய்வது ஒவ்வொரு நாகரீக மனிதனின் பொறுப்பு", என்று பால்டிக் பிரதேசத்திலிருக்கும் 'நாயபுத்' என்று பெயருள்ள ஒரு சிறு பெண் சொல்லியிருக்கிருள். (இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 10.) | **"போல்ஷிவிக் கொள்கை ஐரோப்பா பூராவும் பரவாதபடி தடுக்க ருஷ்யாவை ஜெர்மனி எதிர்க்கிறதென்று எண்ணுவது தவறுதல். ஜனங்கள் முன்னேற்றத்தையோ அல்லது நாகரீகத்தையோ, அல்லது ஜன நாயகத்தையோ பாதுகாக்க நாங்கள் போராடவில்லை; ஆனல் ஜெர்மனியை பாதுகாக்கவேண்டியே யுத்தம் புரிகிறேம்" என்று ஸர்க்கார் துடர்புள்ள, ஷ்வார்ஸ்கோர் (Schwarze Korps) என்ற நாஸி செய்தி ஸ்தாபனம் ஜூலை 17-ல் வெட்ட வெளிச்சமாகக் கூறுகிறது.** |

## கோயபெல்ஸுக்கு வாய்ப்பூட்டு.

*'கிழக்குப் பக்கத்தில் அடைந்த வெற்றி சரித்திர முக்கியத்வம் வாய்ந்தது" என்று முந்தின நாள் பிரசுரிக்கப்பட்ட விசேஷ அறிக்கையைப்பற்றி 'நார்த் டெலிகிராம் ப்யூரோ' என்னும் நார்வீஜியன் பத்திரிகை கூறுகிறது.*

(இங்கிலீஷில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 7).

நார்வேயிலுள்ள ரீச் ஸர்க்கார் தொடர்புள்ள செய்தி ஸ்தாபனத்திலிருந்து வந்த (லாப்டனில் பிடிபட்ட) அறிக்கை பின்வருமாறு கூறுகிறது :—

"செய்தி ஸ்தாபனம் முக்கியமாக அரசியல் நோக்கத்தை ஒட்டியே இருக்கவேண்டும். அதனால் ஜெர்மன் ரீச் ஸர்க்கார் தொடர்பாகவும் அதற்குச் சாதகமாயுள்ள செய்திகளை மட்டும், பிரசுரிக்கவேண்டும்."

"நார்வே உள்நாட்டு அரசாங்கத் திற்குத் தகுதியான முறைகளை ஏற்படுத்த பத்திரிகை ஆசிரியர்களும் பூராவும் ஆதரிக்கவேண்டும்."

"விளம்பரங்களும் ஸர்க்கார் இஷ்டப் படிதான் போடவேண்டும்".

*"அமெரிக்க பத்திரிகை நிருபர்கள் பிரிடிஷாரின் பிரசாரத்திற்கு அதிகம் இடங்கொடுக்கிறார்கள். அதனால் அவர்கள் ஏளனத்திற்கு இடமாகிறார்கள். ஜெர்மனியில் வெளிநாட்டுப் பத்திரிகை ஆசிரியர்கள் தலையிடுவதற்கும் தப்பு அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கும் எடுத்துக்கொள்ளும் முறைகள் அனுமதிக்கப்படமாட்டா. ஒரு நாளைக்கு இருமுறை வெவ்வேறு போர் முனைகளில் நடக்கும் விஷயங்களைச் ஸர்க்காரே அறிவித்துவிடுகிறார்கள். அவர்களுக்குக் கொஞ்சமும் பயமில்லாமல் ஜெர்மனியிலும், ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளிலும் தாராளமாகச் செல்ல பூரா உரிமை கொடுக்கப்பட்டு இருக்கிறது."*

(இங்கிலீஷில் மொழி பெயர்க்கப்பட்ட ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 6).

"ஜெர்மனியிலும் பிரான்ஸிலும் எங்களில் அநேகர் இருந்திருக்கிறார்கள். இவ்விரு தேசங்களில், அமுலிலிருக்கும் பத்திரிகைத் தடையைக் காட்டிலும், பிரிடிஷ் தடை மிகவும் மிதமானது. *யாரைப் பற்றியும் குறித்து எங்கள் இஷ்டம் போல் எழுதவோ, எங்கள் அபிப்பிராயத்தை வெளியிடவோ எங்களுக்கு முடியும்" என்று மிகவும் கியாதி வாய்ந்த அமெரிக்கப் பத்திரிகாசிரியர், க்யின்டின் ரெயினால்ட்ஸ் எழுதுகிறார்.*

## ஹிட்லரும், இஸ்லாமும்.

*"ஹெர்ஸிகோவினா (Herzegovina) பாஸ்னியா (Bosnia) ஆகிய முஸ்லீம் நாடுகளுக்கு சுயேச்சை கொடுத்தவுடன் அத்தேசத்தினர்கள் ரொம்பவும் சந்தோஷப்படுகிறார்கள். ஜனநாயகத் தன்மையுடன் வாழும்படி க்ரோஷியர்களுக்கு உதவி செய்ததிலிருந்து, ஜெர்மனி ஆக்கிரமித்த சிறுநாடுகளுக்கு ஸ்வதந்திரம் அளிக்கப்போவதாக ஜெர்மனி உலகத்தாருக்குக் காண்பிக்கப் போகிறதாம்."*

(ஹிந்துஸ்தானியில் மொழி பெயர்க்கப்பட்ட ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 8).

*க்ரோஷியாவிலுள்ள முகமதியர்கள் ஹிட்லரால் அளிக்கப்படும் ஸ்வதந்திரம் எப்பேற்பட்டதென்று, தெரிந்து கொண்டார்கள். மேலும் "யூகோஸ்லாவியாவில் ஜெர்மன் சைனியம் புகுந்ததும், முகமதியர்கள் வசிக்கும் பட்டணங்களும், கிராமங்களும்தான் அதிகம் பாழாக்கப்பட்டன. 'ஸராஜிவோ' வில் உள்ள முகமதியர் கோவில் பூரா தகர்க்கப்பட்டது. இப்பொழுது அங்கே ஒன்றுமில்லை," என்று மகமட் எல்-ஷிஹமி என்பவர் 'வாப்ட்-எல்-மஸ்ரி' என்ற எகிப்து பத்திரிகையில் கூறுகிறார்.*

"ஸிரியாவில் பிரிடிஷார் ஆதிக்கமடைந்ததினுல் அங்குள்ள பொருளாதாரச் சாதனங்கள் குறைந்து வருகின்றன. அங்கு இருக்கும் சொத்துக்களை பிரிடிஷார் தங்கள் சொந்த உபயோகம் செய்துகொள்ளுகின்றனர்".
(ஹிந்துஸ்தானியில் ஜெர்மன் செய்தி, ஆகஸ்டு 8).

"இராக்கில் பிரிடிஷார் செய்யும் கொடுங்கோன்மையும், அட்டூழியங்களையும் நம் ஜனங்கள் கேட்டிருப்பார்கள். இது நிச்சயமாக இராக்கிலிருக்கும் ஸ்வதந்திரத்தை அடக்கத்தான் செய்யப்படுகிறது".
(பெர்ஸியன், அராபிக் பாஷைகளில் ஜெர்மன் செய்தி).

பிரிடிஷார் அங்கு வரும்பொழுது அங்குள்ளவர்களுக்கு ஆகாரம் முதலியத் தேவைகளைக் கொண்டுவந்ததாகவும், ஆனால் ஜெர்மன் மந்திரி க்ரோபா, இராக்கிலிருந்து இரண்டு சாக்குத் தங்கம் எடுத்துச் சென்றதாகவும் எகிப்து பத்திரிகை ஆல்ஷஹலா ஒப்பிட்டுச் சொல்லுகிறது.

இராக்கில் பிரிடிஷ் அரசாங்கம் இல்லையென்றும், மட்டை தான் எல்லாவித அதிகாரத்தையும் செலுத்துகிறர் என்றும் யாவருக்கும் தெரியும். மேலும் இராக்கின் ஸ்வதந்திரம் கெடுதலையடையாமல் இருக்கிறதென்று அதன் வழியாகச் செல்லும் இந்தியச் சிப்பாய்களுக்கும் நன்றாகத் தெரியும். இதனுல் நாஸிகளின் பொய் வெளியாகிறது.

## தென் அமெரிக்காவில் ஜெர்மன் அரசாக்ஷியை நாட்டப் பிரயத்தனம்.

### நாஸிப் புரட்சிகள் வெளியாயின.

அமெரிக்காவின் நடுபாகத்திலும் தென் அமெரிக்காவிலும் நாஸி முயற்சிகளை அடக்குவதற்கு தாமதமில்லாமல் எடுத்துக்கொண்ட நடவடிக்கை போலவே மற்ற நாடுகளிலும் நாஸி 5-ம் படையை ஒழிக்க எடுத்துக்கொள்ளவேண்டும்.

இந்த நடவடிக்கைகள் பிசகென்றும் ஜெர்மானியர் ஒன்றும் அறியாத அப்பாவிகளென்றும் பேர்லின் ரேடியோவில் கோபமாகக் கூக்குறலிடுகின்றனர்.

கீழ்கண்ட உண்மை நடப்புகள் நாஸிகளின் குற்றங்களை வெளிப்படுத்துகின்றன. அவர்களால் முன்பின் விரோதமாகச் சொல்லப்பட்ட வாக்குமூலம் குற்றங்களை நிஜமாப்படுத்துகின்றன.

"மதிஹீனமாயும் தங்களுக்கேத் தீங்கை விளைவிக்கக்கூடியதுமான ஜனநாயக ஆட்சி தற்போது தென் அமெரிக்காவில் தானிருக்கிறது.........இப் பிரசாரத்தைச் செய்ய நம் ஜனங்களை அங்கே அனுப்பவேண்டும்.........துணிகரமான யௌவன மனிதர்கள் தேவை"—(1933-ல் தென் அமெரிக்கத் தலைவருடன் ஹிட்லர் பேசியது அங்கு இருந்த டாக்டர் ராஷிங்க் 'ஹிட்லர் பேசுகிருர்' என்ற புஸ்தகத்தில் அறிவித்தது).

"பிரேஸிலில் ஜெர்மன் அரசாக்ஷியை ஸ்தாபிப்போம்.........முதல் வில்லியம் சைனியத்தை எடுத்துக்கொண்டு தேசங்களைப் பிடித்ததுபோல் இல்லாமல் கண்களுக்குத் தெரியாத பிரசாரத்தால் பிடிப்போம்"—(முன் சொன்ன அறிக்கை).

" அர்ஜென்டைனாவும், பொலீவியாவும் முதலில் கவனிக்கத்தக்கவை "-(முன் அறிக்கை).

" மெக்ஸிகோ நம்மிடமிருந்தால் எல்லாக் கஷ்டங்களும் தீர்ந்துவிடும்......... அங்கிருக்கும் விளைவுபொருள்களால் ஜெர்மனி லாபத்தையும் பெயரையும் அடைய வேண்டும்"—(1934-ல் ஹிட்லர் டாக்டர் ராஷிநிக் என்பவரிடம் சொன்னது).

" ஜெர்மனியிலும், இதாலியிலும் இருப்பதுபோல், அந்த சிறு ராஜ்ஜியங்களுக்கும் தேர்ந்தெடுக்கும் உரிமை இருப்பது கேவலம். க்யூபா, உருகுவே, பொலீவியா இவையாவும் அனுமதேய ஸமஸ்தானங்கள். அதிலிருக்கும் ஜனங்களும் ஜெர்மானியர், இதாலியர் போலவா? நாகரீகமில்லாத மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மனிதர்களா? இவர்களுக்கும் சம உரிமையா!"—(1933-ல் சர்வ தேசத்தொழில் கூட்டத்தில் நாஸித் தொழில் தலைவர். டாக்டர் 'லே' என்பவரின் பேச்சு பாரிஸில் 'டாஸ்நியூ டாஜ்பெக்' என்ற பத்திரிகையில் வெளியானது).

# புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

## பிரஸங்கம் 58.

1941—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | மணி. |
| ஆகஸ்டு ...23, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| 24, | ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.15 |
| | | பூவரசகுடி | ... | மாலை | 6.00 |
| | | வேங்கடக்குளம் | . | ,, | 6.30 |
| 25, | திங்கட்கிழமை ... | காலேஜ் (B) தமிழ் | ... | காலை | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.15 |
| | | பெருங்களூர் | ... | மாலை | 6.00 |
| | | ஆதனக்கோட்டை | ... | ,, | 6.30 |
| 26, | செவ்வாய்க்கிழமை. | மலம்பட்டி | ... | ,, | 6.00 |
| | | பெரம்பூர் | ... | ,, | 6.30 |
| 27, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | திருக்கோகர்ணம் | ... | மாலை | 5.30 |
| | | அரிமளம் | ... | ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை | ... | ,, | 6.30 |
| 28, | வியாழக்கிழமை ... | கீரனூர் | ... | ,, | 6.00 |
| | | நாஞ்சூர் | ... | ,, | 6.30 |
| 29, | வெள்ளிக்கிழமை... | ஒடையாளிப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை | ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 59.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30, | சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| 31, | ஞாயிற்றுக்கிழமை. | காலேஜ் (A) ஆங்கிலம் | ... | காலை | 10.15 |
| | | வயலோகம் | ... | மாலை | 6.00 |
| | | குடுமியாமலை | ... | ,, | 6.30 |
| செப்டம்பர் ...1, | திங்கட்கிழமை ... | நச்சாந்துபட்டி | ... | ,, | 6.00 |
| | | விராச்சிலை | ... | ,, | 6.30 |
| 2, | செவ்வாய்க்கிழமை | நல்லூர் | ... | ,, | 6.00 |
| | | மண்டையூர் | ... | ,, | 6.30 |
| 3, | புதன்கிழமை ... | C.S.M. பள்ளிக்கூடம் | ... | காலை | 10.00 |
| | | காலேஜ் (B) தமிழ் | ... | ,, | 10.15 |
| | | ராணி பெண்பாடசாலை | ... | ,, | 10.15 |
| | | திருமயம் | ... | மாலை | 6.00 |
| | | கோனாபட்டு | ... | ,, | 6.30 |
| 4, | வியாழக்கிழமை. | பனையப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | ராங்கியம் | ... | ,, | 6.30 |
| 5, | வெள்ளிக்கிழமை... | ராஜகிரி | ... | ,, | 6.00 |
| | | விராலிமலை | ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 3,000—23-8-41.